MRIGATHRISHNIKA

A TAMIL DRAMA

BY

S. RANGASWAMY IYER,

OF

TIRUPATUR

PUBLISHED BY

A. V. AIYER & Co.,

BOOKSELLERS AND PUBLISHERS, TRIPLICANE, MADRAS.

1911

ALL RIGHTS RESERVED.] [PRICE AS. 6.

INSCRIBED

TO THE BLESSED MEMORY OF

MY DEAR FATHER,

Late M. R. Ry. T. R. SUBRAMANIA IYER AVERGAL,

Vakil, Tirupatur,

A TAMIL SCHOLAR AND ONE WHO TOOK

INTEREST IN TAMIL

LITERATURE.

PREFACE.

The object of the author in producing the little book is, that it may serve to bring out to the people at large, the beauties of Shakespeare the sovereign dramatist of England. This little work follows in plot 'Twelfth Night' or 'What you will' written by the same dramatist. It has been said that this play is the most comical of all Shakespearian dramas. No doubt, the beauties of one language cannot be rendered into another, but the author has tried to the best of his abilities to retain the spirit of the original in this little work. How far the attempt of the author has been successful, is left for the readers to judge.

In conclusion I am to think personally M. R. Ry., Varakavi Thiru A. Subramania Bharathiar Avergal, for the kind assistance given by him in rendering the work more idiomatic and grammatical, and also to Messrs. A. V. Aiyer & Co., Triplicane, who have been good enough to bring out the publication of this, my maiden work.

TIRUPATUR,
1st August 1911.

THE AUTHOR.

மிருகதிருஷ்ணிகா.

நாடகபாத்திரங்கள்.

1	ஜயசிங்கன்	...	வங்கநாட்டரசன்.
2	சாந்தசீலன்	...	மிருகதிருஷ்ணிகையின் சகோதரன்.
3	அஜிட்சிங்	...	ஓர் மாலுமித்தலைவன். சாந்தசீலனின் மித்திரன்.
4	சாகரன்	...	ஓர் மாலுமி. மிருகதிருஷ்ணிகையின் சிநேகிதன்.
5	வல்லபன்	...	ஜயசிங்கனிடமிருக்கும் கனவான்கள்.
6	கருணாகரன்	...	
7	சோமநாதன்	...	சந்திரவதனியின் சிற்றப்பன்
8	பூபேந்திரன்.		
9	மகிபாலன்	...	சந்திரவதனியின் கன்னிமாடத்துக் காவலாளன்.
10	பாபு	...	சந்திரவதனியின் வேலையாட்கள்.
11	சாபு	...	
12	சந்திரவதனை	...	ஓர் சீமாட்டி.
13	மிருகதிருஷ்ணிகை		நாடகத்தலைவி.
14	நீலலோசனி	...	சந்திரவதனியின் தோழி.

இன்னும் பிரபுக்கள், மாலுமிகள், பாடகர்கள் முதலானவர்கள்.

நாடகம் நிகழுமிடம் :—வங்கநாட்டில் ஓர் நகரத்திலும், அதற் கருகிலுள்ள அடவிக்கரையிலும்.

மிருகதிருஷ்ணா.

முதல் அங்கம்.

முதல் காட்சி.

மன்னனது மாளிகையில் ஜயசிங்கன், கருணைகரன், பிரபுக்கள், பாடகர்கள் முதலானவர்கள் பிரவேசிக்கிறார்கள்.

ஜய. மார்தரது மனமெனுங் கல்லை அனலிலிட்ட மெழுகு போல் உருக்கும் சங்கீதமென்பது, காதலைப் பெருக்குதற்குக் காரணமாயிருப்பின், ஏ நல்லிசைப் பாடகர்காள்! யான் சற்று இன்புறுமாறு ஒரு இனிய பதம் பாடுவீர்களாக.

(பாடுகிறார்கள்.)

இராகம் - முகாரி.

'சிதம்பர தரிசனமோ' என்கிற மெட்டு.

பல்லவி.

கருணைகரா எம்மைக் காத்தருளும் நாதா
அருணைசலேசா - அம்பிகை நேசா (கரு)

சரணம்.

திருபுரஹரதீரா
ஜடாபாரதரா
உமாபதே
மிருகதரசூலீ
பார்வதீ மனோஹரா
பக்தஜனபாவன
கங்காதர
நீலகண்டவிபோ

திரிநயனவீரா
சலதரகஹரா
தயாநிதே
கபாலதாரீ (கரு)
பத்மநாபப்பிரியா
பரமாத்மசம்போ
மகாதேவ
அர்த்தநாரீபிரபோ (கரு)

ஐய. ஆ! இதுதான், இன்னொரு முறை பாடுங்கள்.

(பாடுகிறார்கள்.)

ஆ! ஆ! கர்ணமிருதமாக வல்லவா இருக்கிறது.— செய்! போதும் நிறுத்துங்கள்! ஐயோ இதென்ன? முன்னிருந்த இனிமை இப்பொழுது காணேனே! மாரனே! மானிடர்களின் மனதை எவ்வளவு சிக்கிரத்தில் கலங்கச் செய்கின்றாய்? உன் பஞ்சபாணத்திற் கிலக்காகாதவர்கள் இப்புவிதனிலும் உண்டோ? இவை யாவும் உனக்கு ஒரு விளையாட்டே போலும்!

கரு. என் ஐயனே! தாங்கள் மான் வேட்டைக்குச் செல்லுகிறீர்களா?

ஐய. கருணைகரா! இப்பொழுது நீ கூறியதென்ன?

கரு. பிரபுவே! மான் வேட்டைக்குச் செல்லுகிறீர்களா எனக் கேட்டேன்.

ஐய. ஏன்! நானே ஒரு மானுக இருக்கிறேனே? இந்துவை நிகர்த்த எழிின் முகத்தையுடைய சந்திரவதனியை நான் கண்டதுமுதல், ஒரு மானேனல்லவா. ஆ!

அவளை மணம்புரியுமெண்ணம் குரூரமான வேட்டை நாயைப்போல் என்னைப் பின் தொடருகிறதே! யான் யாது செய்வேன்?

வல்லபன் பிரவேசிக்கிறன்.

வல்லபா! வா, அவளிடம் சென்றிருந்தாயே, என்ன விசேஷம்?

வல். இராஜாதிராஜ! நான் அங்கு சென்றபோது அவள் என்னைத் தன் வீட்டிற்குள் வரக்கூடாதென்று தடுத்து விட்டாள். ஆனால் அவள் வேலைக்காரியிட மிருந்து ஒரு சமாசாரம் மட்டும் தெரிந்துகொண்டு வந்தேன். அது யாதெனில், மன்ன! அவள் அருமைச் சகோதரன் இறந்து விட்டானும். அதினாலவள் சோக சாகரத்தில் மூழ்கித் தன்முகத்தை எப்பொழுதும் மூடிக் கொண்டு வெளிவராமலிருக்கப் போகிறளாம். எங்கு முளவானமும் அவளைக் காணமுடியாதாம்.

ஜய. ஐயோ! இதுவும் என் விதியோ! தன் சகோதரனுக் காக விசனப்பட்டுக் கொண்டிருக்கும் அப்பெண்மணி இனி என்மேல் எப்படிக் காதல் கொள்வாள்? ஆ! ஜகதீசா! உமக்கு இன்னும் கருணை வரவில்லையோ? யான் தீவாய்ப்பட்ட புழுப்போல் துடிக்கிறேனே? யான் யாது செய்வேன்? —

சற்றுப் பூங்காவனத்திற்குப் போய் இளைப்பாறிவிட்டு வருகிறேன். (போகிறான்.)

இரண்டாம் காட்சி.

கடற்கரையில் மிருகதிருஷ்ணிகை, சாகரன் இன்னும் மற்ற மாலுமிகளிருக்கிறார்கள்.

மிரு. *நண்பர்காள்! இது என்ன தேசம்?*

சாக. *அம்மா! இதை வங்கநாடென்று கூறுவார்கள்.*

மிரு. *எனக்கு வங்கநாட்டில் யாது காரியம்? என் உடன் பிறப்போ கப்பல் உடைந்து கடலில் மூழ்கியதால் இறந்து விட்டான். ஆ தெய்வமே!* (பாடுகிறாள்.)

இராகம் - எதுகுலகாம்போதி.

பல்லவி.

விதிதனின் வலியையும் செப்புவன் கேண்மினே
பாவிப் பாதகிக்க லானேன். (விதி)

அநுபல்லவி.

பிறந்ததேதா *சௌராஷ்டிராம்*
வந்ததேதா *கடன்மீது*
இருப்பதேதா *இத்தேசம்*
எழையான் *யாதுசெய்வேன்* (விதி)

சரணம்.

கன்மேல் மோதியே கப்பல்
உடையவு மாச்சே - என்
அருமைச் சகோதரன் - அலைக்கரையானானே.
யானே தனிமைப்பட்டு எத்தேசமும் மறியாமல்
உழல்வேனே தோழர்காள் - செப்புவீர் வழியொன்று (விதி)

ஒருவேளை அவன் தப்பிப் பிழைத்திருக்கக் கூடுமோ மாலுமிகாள்! நீங்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சாக. நீங்கள் தப்பிப் பிழைத்ததும் காருண்ய மூர்த்தியின் கருணை கடாட்சத்தினலேதான்.

மிரு. தெய்வ வசத்தினல் அவனும் என்னைப் போலவே பிழைத்திருக்க மாட்டானு?

சாக. அம்மணி! நம் கப்பல் உடைந்து நாமும் நம் நண்பர் களும் ஒரு படகில் ஏறிக்கொண்டு கரையை நோக்கி வந்தோமல்லவா? அப்பொழுது தைரியத்தையும் பிழை ப்போ மென்ற நம்பிக்கையையும் கைவிடாது, ஒரு பாய்மரத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு,பாற் கடலில் ஆலிலைமேல் கண்ணனைப்போல், தமது சகோ தரன் மிதந்து கொண்டிருக்க நான் கண்ணுற்றேன். அதினலேயே அவர் பிழைத்திருக்கக் கூடுமென்று நான் எண்ணுகிறேன்.

மிரு. என் மனதை இம்மாதிரி தைரியப் படுத்தியதற்காக நான் உனக்கு என்ன பரிசளிப்பேன். அவன் மிதந்து கொண்டிருந்ததாக நீ சொல்வதினலும், அபலையான நான் கூட திரைகடலின் கரங்களினின்று தப்பிப் பிழைத்ததினலும், என் சகோதரன் கட்டாயம் பிழை த்திருக்க வேண்டும்—இது என்ன தேசமென்று நீ நன்கறிவாயா?

சாக. நான் நன்கறிவேன்; அம்ம! நான் பிறந்து வளர்ந்த தெல்லாம் இந்நாடுதான். ஆகையால் இத்தேசத்தை நான் நன்கறிவேன்.

மிரு. இந்நாட்டை ஆள்பவர் யார்?

சாக. மகா குணசாலியும், மனுநீதி தவறுமல் செங்கோல் செலுத்தி வருபவனுமாகிய ஓரசன்.

மிரு. அவர் பேர் யாது? உனக்குத் தெரியுமா?

சாக. ஜயசிங்கன் என்பது அவர் திருநாமம்.

மிரு. ஜயசிங்கன்? இப்பெயரை என் தந்தை அடிக்கடி சொல்ல நான் கேட்டிருக்கிறேனே! அவருக்கு அப் பொழுது கலியாணம் ஆகவில்லை யல்லவா?

சாக. இன்னும் அவருக்குக் கலியாணமாகவில்லை. நான் ஒரு மாதத்திற்கு முன் இதைவிட்டுப் போனபோது, சௌந் தரிய சாகரமாகிய சந்திரவதனையை அவர் மணம்புரிய எண்ணிக் கொண்டிருப்பதாக இந்நாட்டில் வதந்தி உலாவியது.

மிரு. சந்திரவதனையா! அவள் யார்?

சாக. ஒரு நற்குணமுடைய மாது. ஒரு வருஷத்திற்கு முன், அவள் தந்தை அவளைத் தன்மகனிடம் விட்டுச் சிவபத மடைந்தான். கொஞ்ச நாளைக்கெல்லாம் அவள் சகோ தரனும் தந்தை இருப்பிடம்போய்ச் சேர்ந்தான். இந்த துக்கத்தைச் சகிக்கமுடியாத அவள் மானிடர்களை இனிமேல் கண்ணுற்றுப் பார்ப்பதில்லை என்று சபதம் செய்திருக்கிறாளாம்.

மிரு. அப்படியா! நான் என் உண்மை நிலைமையை எல் லோர்க்கும் தெரியப்படுத்தும் வரையில், அவளுக்கு ஒரு தாதியாகப்போய் அமர்ந்து விடலாமென்று கருது கிறேன்.

சாக. அப்படிச் செய்வது அசாத்தியம். அரசனுடைய வேலை யாட்களைக்கூட அவள் தன்னிடம்வரவேண்டாமென்று சொல்லி விட்டாள். உங்களை அவள் எவ்விதம் அங்கீ கரிக்கப் போகின்றாள்?

மிரு. சாகரா! சமயத்தில் உபதேசம் செய்ய நீதான் சரி. உலகில் மிகவும் அழகா யிருப்பவர்களின் நெஞ்சம், ஆலாலத்தைப் போலிருப்பது சகஜம். ஆனல் உன் உடம்பின் அழகைப்போலவே உன் உள்ளமும் அழகா யிருக்கின்றது. நீ எனக்கு ஒரு உதவி மாத்திரம் செய்யவேண்டும். அது யாதெனில், நான் ஒரு நபும்சக வேடம் பூண்டு இன்னட்டாசனிடம் சென்று, அவனுக்கு ஒரு வேலையாளாக வமர்ந்து, சிலகாலம் கழிக்க எண்ணம் கொண்டிருக்கிறேன். நான் அவனை என் இனிய மொழிகளால் சந்தோஷப்படுத்தக் கூடுமென்றெண்ணுகிறேன். நீ ஒருவரிடமும் என் நிஜஸ்வரூபத்தை வெளியிடக்கூடாது. உன் மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டிருக்க வேண்டுகிறேன். இதுதான் நீ என்னிமித்தம் செய்யுமுபகாரம்.

சாக. அம்மா! அப்படியே செய்கிறேன். நான் உங்கள் நிஜஸ்வரூபத்தை வெளியிடுவேனுகில், நீங்கள் விதிக்கும் தண்டனைக்கு உள்ளாகிறேன்.

மிரு. இவ்வுபகாரத்திற்கு நான் உனக்கு மறு உபகாரம் யாதுதான் செய்யப் போகிறேன். என்னை அரசனிடம் அழைத்துச் செல். (போகிறுள்.)

மூன்றும் காட்சி.

சந்திரவதனியின் மாளிகையில் சோமநாதனும் நீலலோசனியும் பிரவேசிக்கிறுர்கள்.

சோமநாதன் பாடிக்கொண்டே வருகிறன்.

தொண்டிச்சிந்து.

சாராயம் ருசி அண்ணே - அதற்குச் சர்க்கரையும் கற்கண்டும் இணையாகுமோ - சாராயம் ருசி அண்ணே. தாராய் நீ ஒருமொந்தை-

அண்ணே - சடுதியிலே தாராய் தாகந்தீர - சாராயம் ருசி அண்ணே. இந்திரன் ஆதியோரும் - கையில் - ஏந்திக்குடிக்கும் பான மிது—, தந்தோம் ததிங்கணத்தோம்.

இதென்ன நீலலோசனி! நம்ம சந்திரவதனி தம்பி இறந்து போனதற்கு இப்படி விசனப்பட்டுக் கொண் டிருக்கிறாளே. சரி! சரி!! இப்படி விசனப்பட்டால் அவள் ஆயுள் குறையவேண்டியது தான்.

நீல. சோமநாதா! அதெல்லா மிருக்கட்டும், நீ ராத்திரி வேளையில் அதிக நேரம் கழித்து வீட்டிற்கு வருவ தைப் பற்றி நம்ம சந்திரவதனி மிகவும் கோபித்துக் கொள்கிறாள். நீ ஏன் அப்படி நேரங்கழித்து வர வேண்டும்?

சோ. என்ன! கோபித்துக் கொண்டாளா? கோபித்துக் கொள்ளட்டுமே. நான் பயப்படுகிறவன்.

நீல. நன்றாய் இருக்கின்றது! நீ ஒருவருக்கும் தொந்தரவு இல்லாதபடி சீக்கிரம் வந்து விட வேண்டாமா?

சோ. நன்றாய்த்தா னிருக்கிறது. நான் போட்டுக்கொண் டிருக்கும் இந்த உடுப்பு நன்றாய் இல்லையா? அல்லது நான் குடிப்பது நன்றாயில்லையா? நான்தான் ஒரு நாளைக்கு ஒரு மொடா குடிக்கிறேனே?

நீல. அந்தக்குடி உன்னைக் கொல்லத்தான் போகிறது. உன் குடியைப் பற்றியும் நேற்று நீ அழைத்து வந்த ஒரு மூடனைப் பற்றியும் நானும் சந்திரவதனையும் பேசிக் கொண்டிருந்தோம். அவனையா சந்திரவதனி கலி யாணம் செய்துகொள்ளப் போகிறாள்?

சோ. யாரு, பூபேந்திரனு! அவனைப்பற்றியா சொல்கிறாய்?

நீல. அவன்தான் முழுமூடனுயிற்றே.

சோ. அவன் இத்தேசத்திலே இருப்பவர்களைக் காட்டிலும் ஒருசாண் உயரமானவ னல்லவா? அவனை இப்படிச் சொல்லலாமா?

நீல. அவன் உயரமானவனுனல் நமக்கென்ன ஆகவேண்டியது?

சோ. அவனுக்கு இன்னும் வருஷத்திற்கு 3000 ரூபாய் வரும்படி இருக்கின்றது. அவன் பெரிய பணக்காரனல்லவா?

நீல. பேஷ்! வருஷம் ஒன்றுக்கு 3000 வீதம் பத்து வருஷத்தில் வரக்கூடிய பணம் அவனுக்கு ஒரு வருஷத்திற்குப் போதாது. அவன் அப்படியல்லவா வீண் செலவு செய்கிறான்.

சோ. சீ! நீ இனிமேல் அவன்பேரில் இம்மாதிரி சொல்லாதே. அவனுக்கு நன்றுய்ப் பாடத்தெரியும். புஸ்தகமில்லாமலே ஐந்தாறு பாஷை படிப்பான். இன்னும் மனிதனுக்கு என்ன வேண்டும்?

நீல. ஒன்றும் வேண்டாம். அவனுக்குச் சண்டை பிடிப்பதிலேயே எண்ணம். இப்படிச் சண்டைபிடித்தால் சீக்கிரம் எமலோகம்போய்ச் சேர்வான் என்று சொல்கிறார்கள்.

சோ. எமலோகமா! யார் சொல்வதப்படி? சொல்லு இப்பொழுது.

நீல. நீயும் அவனும் இராத்திரி முழுதும் குடிக்கிறீர்கள் என்று யார் சொல்கிறார்களோ அவர்கள்தான் இதையும் சொல்வது.

சோ. குடிப்பதா! குடிப்பதில் மிகவும் நன்மை யிருக்கிறதென்று உனக்குத் தெரியாது. எதுவரையில் என் தொண்டையில் துவாரம் இருக்கிறதோ அதுவரையில் தானே குடிக்கப்போகிறேன்—சரி அதோ பூபேந்திரன் வந்துவிட்டான். நீ கொஞ்சம் கோபமுள்ளவனைப் போலிரு.

பூபேந்திரன் பிரவேசிக்கிறன்.

பூ. சோமநாதா! சோமநாதா! என்ன சமாசாரம்?

சோ. பூபேந்திரா! வா! வா! எங்கே வெகுநாழிகையாகக் காணோம்?

பூ. நீங்கள் சுகமா யிருக்கிறீர்களா அம்மா!

சோ. வந்தனம்! பூபேந்திரா வந்தனம்! (என்று பூபேந்திரனைச் சுட்டிக்காட்டி நீலலோசனிக்கு வந்தனம் செய்யச் சொல்கிறான்.)

பூ. அது என்ன?

சோ. சந்திரவதனியின் தோழி அவள்.

பூ. அவள் தோழியா! அம்மா வந்தனம்பாள் உங்களை முதலில் தெரியவில்லை.

நீல. ஐயா! என்பெயர் நீலலோசனி.

பூ. அப்படியா! அடடா! தப்பு செய்துவிட்டேன். உங்கள் பெயர் நீலலோசனி வந்தனம்பாளோ?

சோ. (தனக்குள்) இப்பவும் தப்புத்தான். வந்தனம் என்றால் அர்த்தம் தெரியவில்லை. அனர்த்தம் செய்து விடுகிறான். (வெளிப்படையாய்) பூபேந்திரா வந்தனம் செய் என்றால் நமஸ்காரம் செய்கிறது.

பூ. அப்படியா அர்த்தம்! ஆமாம் ஒரு மாதுக்கா நமஸ்காரம் பண்ணச் சொல்கிறாய்?

நீல. ஐயா! உங்களை ஒருவரும் நமஸ்காரம் செய்யச் சொல்லவில்லை. தாங்கள் ஏன் வருத்தப்பட வேண்டும்? (ஒருபுறமாக) இவனைக் காட்டிலும் வேறு மூடர்கள் இவ்வுலகில் உண்டோ! (பூபேந்திரனைப் பார்த்து) ஐயா! நான் சென்று வருகிறேன். (போகிறாள்.)

சோ. இன்றைக்கு மொந்தை சரியாப்போடவில்லையோ? அதனால்தான் இப்படி ஸ்திரீயோடு கூடச் சண்டை பிடித்தாய்.

பூ. சரி! சரி! நிறைய மொந்தை போட்டால்தான் எனக்குப் புத்திமயங்கிப் போகிறது. இன்றைக்கு நான் நிறைய மாமிசம் சாப்பிட்டு விட்டு வந்தேன். அதனால் தான் புத்தி இப்படி மாறிவிட்டது.

சோ. சரிதான், அதேதான்!

பூ. சோமநாதா! நான் ஊருக்குப் போவதாக எண்ணியிருக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?

சோ. என்ன! ஊருக்கா! ஏன்?

பூ. இங்கு வீண்போது போக்குவதைச் சங்கீதத்திலும் படிப்பிலும் செலவு செய்தால் மிகவும் பயன்தரும். இங்கே உட்கார்ந்து கொண்டு என்ன செய்வது?

சோ. அப்படிச் செய்திருந்தால் உன் தலையெல்லாம் மூளையா யிருக்குமே.

பூ. என்ன! என் தலைமயிர் நன்றாய் இல்லை என்று சொன்னாய்?

சோ. உன் தலைமயிர் நன்றாயில்லை என்று யாராவது சொல் வார்களா? அதுதான் சணல் நாரைப்போ லிருக்கி றதே! அதை யாராவது இன்னம் கொஞ்சம் முறுக்கி விட்டால் இன்னும் நன்றாயிருக்கும்.

பூ. அதெல்லா மிருக்கட்டும் நான் நாளைக்குக் கண்டிப் பாய் ஊருக்குப் போகப் போகிறேன். இங்கிருந்து என்ன பிரயோசனம்? சந்திரவதனியைக் கண்ணால் பார்க்க முடிகிறதில்லை. அவளுக்கு நான் ஒரு லட்சி யமா? ஜயசிங்க மகாராஜனை யல்லவா அவள் கலி யாணம் செய்துகொள்ளப் போகிறாள்.

சோ. சீ! அதெல்லாம் கிடையாது. ராஜாவையாவது அவள் கலியாணம் செய்து கொள்கிறதாவது, அதெல்லாம் பொய். நீ இங்கே இரு. உன்னைத்தான் அவள் கலி யாணம் செய்துகொள்ளப் போகிறாள்.

பூ. நன்றாய்ச் சொன்னாய்! ஆனால் இன்னும் ஒருமாத மிருக்கிறேன். எனக்குத் தினம் விருந்தும் சங்கீதமு மாகத்தா னிருக்கவேண்டும். அதற்குச் சம்மதமா?

சோ. உனக்குச் சங்கீதத்தில் மிகவும் பிரியமுண்டா? நாட் டியங்கூட ஆடுவாய் போலிருக்கிறது.

பூ. அதெல்லாம் நன்றாய்த் தெரியும். எனக்குத் தெரியாத வித்தைகூட ஒன்று உண்டா?

சோ. எங்கே நான் பாடுகிறேன். நீ நாட்டியம் ஆடு பார்ப் போம். (பாடுகிறான் பூபேந்திரன் நடிக்கிறான்.)

இங்கிலீஷ் நோட்.

பபமதப - பபமதப - பபமதபமக
ரிகரிபம - ரிகரிபம - ரிகரிபமகச.

பேஷ் பேஷ் எங்கே இன்னம் கொஞ்சம்

(போகிறார்கள்.)

நான்காம் காட்சி.

அரசனின் மாளிகையில் வல்லபனும் நபும்சகவேஷத்துடன் மிருகதிருஷ்ணிகையும் பிரவேசிக்கிறார்கள்.

வல். சாரசா! நீ இங்குவந்து மூன்றுநாள் கூட ஆகவில் லையே. அதற்குள் அரசன் உன்னிடம் எவ்வளவு பிரியமா யிருக்கிறான் பார்த்தாயா? அதே மாதிரி எப்பொழுதும் இருந்துவிட்டால் உனக்குக் குறை வேது?

மிரு. எனக்கு உண்மையாகத் தோன்றவில்லை. அரசன் என் னிடம் உண்மையான அன்பு வைத்திருக்கிறானே?

வல். அதற்கு ஏதாவது தடையுண்டோ? அதில் சந்தேகம் வேண்டாம்.

மிரு. இதோ அரசன் வந்துவிட்டார். நாம் பேசாம விருப் போம்.

ஜயசிங்கன், கருணகான், வேலையாட்கள் பிரவேசிக்கிறார்கள்.

ஜய. சாரசனை யாராவது கண்டீர்களா?

மிரு. மன்ன! இதோ இருக்கின்றேன்! தமதாக்ஞையாது?

ஜய. மற்றவர்களெல்லாம் இவ்விடத்தை விட்டுச்சற்று தூரப் போங்கள் (போகிறார்கள்.)

சாரசா! என் மனதிலுள்ள சமாசாரங்களை எல்லாம் நான் உனக்குச் சொல்லி இருக்கிறேன். நீ யறியாதது ஒன்றில்லை. நீ இப்பொழுது சந்திரவதனியின் வீட்டுக்குப் போவாய். அங்கு உன்னை வேலைபாட்கள் தடைசெய்தால் 'உங்கள் சிரசு போய்விடும்; இது ராஜனது கட்டளை' என்று சொல்.

மிரு. நான் போவதில் தடையேதுமில்லை. சந்திரவதனை சோக சாகரத்தில் மூழ்கி இருப்பதனால் என்னோடு அவள் முகங்கொடுத்துப் பேசுவாளா?

ஜய. அவள் ஒரு சீமாட்டி என்று நீ கருதவேண்டாம். அவளோடு நீ போய் முதலில் பேசு.

மிரு. சரி! பிறகு என்ன?

ஜய. அவளிடம் என் எண்ணத்தை நீ வெளிப்படுத்தி நான் அவள்பேரில் ஆசை கொண்டிருப்பதையும் தெரிவி. நீ சிறுவனுகையால் உன் யுக்திகளால் உன்னால் ஆனமட்டும் முயன்று அவளை என் வசப்படுத்து. இது உன் கடமையாகும்.

மிரு. நான் சொல்லி அவள் கேட்கப்போகிறாளா? இதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

ஜய. உன்னை அவள் பார்த்தபொழுதே உன் வார்த்தையை அவள் கேட்பது நிண்ணம். உன் குரலோ ஸ்திரீகளின் குரலைப்போல் மிகவும் அழகாயிருக்கிறது. உன்

வடிவமோ பார்த்தவர்களை மோகிக்கச் செய்கின்றது. ஆகையால் நீ கட்டாயம் ஜயம்பெற்று வருவாய். (வேலையாட்களைக் கூப்பிட்டு) நீங்கள் எல்லோரும் சாரசன் பின் செல்லுங்கள். நான் தனியே யிருக்கும் பொழுதுதான் சுகப்படுகிறேன். சாசா! நீ என் எண்ணத்தைப் பூர்த்தி செய்வாயேயானால் என் ராஜ்யம் முழுதும் உன்னுடையதே.

மிரு. மன்ன! என்னலான மட்டும் முயற்சி செய்கிறேன். (தனக்குள்) இவனுக்கு நாம பெண்சாதி தேடுவது! நானே இவனுக்கு மனையாளாக ஆகப்போகின்றேனே?

(போகிறாள்.)

ஐந்தாம் காட்சி.

சந்திரவதனியின் மாளிகையில் நீலலோசனியும் சாபுவும் பிரவேசிக்கிறார்கள்.

நீல. நீ இத்தனைநாள் எங்கு சென்றிருந்தாய்? உன்னைச் சந்திரவதனி கழுத்தில் சுருக்கிட்டு தூக்குப்போடப் போகிறாள். நீ என்ன சொல்கிறாய்?

சாபு. தூக்குப்போடப் போகிறாளா? போடட்டுமே; அப்புறம் எனக்குப் பயமே இல்லை.

நீல. என்ன! பயமில்லையா? அதைச் சரியாகச் சொல்.

சாபு. ஒரு தரம் கழுத்தில் கயிறு கட்டிவிட்டால் மறுபடியும் யாராவது கயிறு கட்டப் போகிறார்களா? அதனாலே தான் பயமில்லை.

நீல. பேஷ்! நல்லபதில்! அது எப்படியோ? உன் யஜமானி நீ அதிகநாள் வாமலிருந்ததைப் பற்றி உன்னைத் தூக் கிவிடவாவது போகிறாள்; அல்லது உன்னை வேலையி னின்று துரத்திவிடவாவது போகிறாள். இதில் எதா வது ஒன்று கட்டாயம் நடக்கப்போகின்றது.

சாபு. தூக்குப் போட்டுவிட்டால் என் பெண்சாதிக்கு மிகவும் நல்லது. நான் போய்விட்டால் அவளோடு சண்டை பிடிப்பவர்கள் யார்? என்னைத் துரத்திவிட்டால் எனக்கு வேறுவேலை அகப்படாதோ?

நீல. சரி அப்படியானால் தைரியந்தானே?

சாபு. ஆமாம் 'சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் ஒரு சாண்' அதில் சந்தேகமென்ன? சோமநாதன் மாத் திரம் குடிக்காமல் சுயபுத்தியோ டிருந்தால் உன் சாதுரியத்தைக் கண்டு உடனே உன்னைக் கலியாணம் செய்துகொண்டு விடுவான்.

நீல. உனக்கு என்னவேலை. பரிகாசம் செய்வதுதான்! அதோ சந்திரவதனை வருகிறாள். உன் வேடிக்கை யெல்லாம் அவளிடம் காட்டு. (போகிறாள்).

சாபு. (தனக்குள்) நான் நிஜமாய் ஒருவிகட கவியா யிருக்கும் பட்சத்தில், இப்போதுதான் என்னுடைய சாதுரியத் தைக் காட்டவேண்டும். அனேகம்பேர்கள் தங்களை விகடகவி என்று எண்ணிக் கொள்ளலாம். ஆனால் நான் நிஜமாகவே ஒரு விகடகவிதான். கார்கோடக ருஷி என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமா? 'சாதுரிய மில்லாத வார்த்தையைக் காட்டிலும் சாதுரிய முள்ள ஒரு விகடகவியின் வார்த்தையே மேலானது' என்று

சொல்லி இருக்கிறார். ஆகவே என் வார்த்தைகளில் சந்திரவதனியைச் சந்தோஷப்படுத்துவது நலம்.

சந்திரவதனியும் மகிபாலனும் பிரவேசிக்கிறார்கள்.

சாபு. அம்மா ! நீங்கள் சுகந்தானே ?

சந். இந்தப் பயித்தியக்காரனைத் துரத்துங்கள். இவன் என் முன்னிலையில் இருக்கவேண்டாம்.

சாபு. அடே தடிப்பசகளா ! காது கேட்கவில்லையோ ? அம்மாளைத் துரத்துங்கடா. தடியன்போல் நின்றுகொண்டிருக்கிறீர்கள்.

சந். நீ வரவர வாட்டுத்தடியன் ஆய்விட்டாய். நீ என்னிடம் இருக்க வேண்டாம். போ.

சாபு. மன்னிக்கவேண்டும் அம்மா! வாட்டுத்தடியன் என்று சொன்னீர்களே, அவனை ஈடுத்தடியன் ஆக்க எத்தனை நேரம் பிடிக்கும் ? குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்தால் ஈத்தடியனைப் விடுகிறேன். இதுதானே அசாத்தியம். அப்படிச் செய்தால் உங்கள் இஷ்டப் பிரகாரம் ஈத்தடியன் ஆய்விடுகிறேன். அதிருக்கட்டும். அடே பசகளா ! அம்மாளைத் துரத்துங்கடா.

சந். அடே சாபு ! நான் உன்னைத்தான் துரத்தச் சொன்னேன்.

சாபு. சீ ! நீங்கள் தப்பெண்ணம் கொண்டு விட்டீர்கள். நான் பயித்தியக்காரன் உடுப்புப் போட்டுக் கொண்டதினாலேயே, என்னை முழுப் பயித்தியம் என்று சொல்லி விடலாமா ? உங்களைப் பயித்தியக்காரி யாக்குவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் ?

சந். உன்னால் என்னைப் பயித்தியக்காரி யாக்கமுடியுமா ?

சாபு. ஐந்து நிமிஷத்தில் செய்வேன்.

சந். சரி. எங்கே என்னைப் பயித்தியக்காரி என்று ஸ்தாபி பார்ப்போம்.

சாபு. அம்மா ! தாங்கள் என்னத்திற்கு விசனப்பட்டுக் கொண் டிருக்கிறீர்கள் ?

சந். அதே பயித்தியம். உனக்குத் தெரியாதா ? என் சகோதரன் இறந்து விட்டானே ! அதினால்தான்.

சாபு. அவன் உயிர் நரகத்திற்குப் போயிருக்கு மென்று எண்ணுகிறேன்.

சந். சீ ! அப்படிச் சொல்லாதே. அவன் கண்டிப்பாய்ச் சுவர்க்கந்தான் போயிருப்பான். —

சாபு. பேஷ் ! சகோதரன் சுவர்க்கத்திற்குப் போயிருப்ப தைப்பற்றி யார்தான் விசனப் படுவார்கள் ? இப் பொழுது யார்தான் பயித்தியம் ? அதே பசகளா ! பயித்தியக்காரியைத் துரத்துங்கடா.

சந். என்ன மகிபாலா ! நம்ம சாபு வரவர மிகவும் சாதுர்ய ணாய் விட்டானே.

மகி. ஆமாம். அவன் சாகிறவரையில் அப்படித்தான். கிழத் தன்மை புத்தியைக் குறைத்து விடுவது சகஜம். ஆனால் அது இவனுக்கு வரவர புத்தியை அதிகரிக்கின்றது.

சாபு. ஐயா ! மகிபாலரே ! கிழத்தன்மை எனக்கு புத்தியை அதிகரித்தால் உங்களுக்கு சீக்கிரம் கிழத்தன்மை வரட் டும். புத்தி கொஞ்சம் விருத்தியாகும். உங்களுக்கு

புத்தி அதிகரித்துவிட்டால் நீங்களும் சோமனுதனும் ஒன்றுதான்.

சந். மகிபாலா ! இதற்கென்ன சொல்கிறாய் ?

மகி. நீங்கள் இப் பாபித்திபம் உளறுவதில் சந்தோஷப் படுவது எனக்கு மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது. நீங்கள் அவன் வார்த்தையில் சந்தோஷப் படுவதிலேதான் அவனுக்கு ஆகாசம் இரண்டுசாண் ஆய்விடுகிறது. இப்படிப் பாபித்தியத்தைப் பார்த்து ஆச்சரியப் படுகிறவர்களும் பாபித்தியந்தான்.

சந். நீ அப்படி நினைப்பது மிகவும் பிசகு. விகடகவிகளுக்குச் சாதுரியமாய்ப் பேசுவது சகஜ மல்லவா. அவை களைக்கேட்டு நீ சந்தோஷப் படாமல் கோபித்துக் கொள்வது நன்றாயில்லை.

சாபு. காத்தவராய சாமீ ! எங்க அம்மாளைச் சுகமாக வைத்திருக்க வேண்டும். பாபித்தியக்காரனுக் கனுகூலமாப் பேசறீங்க.

நீலலோசனி பிரவேசிக்கிறாள்.

நீல. அம்மா ! தெருவாசலில் யாரோ ஒரு கனவான் உங்களோடுபேசவேண்டுமென்று நின்றுகொண்டிருக்கிறார்.

சந். ஜயசிங்க னிடமிருந்தா அவர் வந்திருக்கிறார் ?

நீல. அது என்னமோ தெரியாது. அவரைப் பார்த்தால் கனவானைப்போல் தோன்றுகிறது.

சந். யார் அவரை உள்ளேவராதபடி தடுத்து நிற்பது.

நீல. உங்கள் பந்துவாகிய சோமநாதன்தான்.

சந். சோமநாதனை? அவனை இங்கு இழுத்துவாருங்கள்.
(நீலலோசனி போகிறாள்.)

மகிபாலா! வந்திருக்கிறவர் அரசனிடமிருந்து வந்திருந்தால், நான் வீட்டிலில்லை என்றுவது காயலா என்றுவது சொல்லி அனுப்பிவிடு. (மகிபாலன் போகிறான்.)

அடேசாபு! பார்த்தாயா உன்பேரில் மகிபாலன் கோபங் கொண்டதை.

சாபு. உங்கள் குழந்தை பயித்தியக்காரனை யிருப்பதுபோல் என்னிடம் பேசிவிட்டீர்களே. இதோ சோமநாதன் வந்துவிட்டான்.

சோமநாதன் கள் குடித்துவிட்டு
ஆடிக்கொண்டே வருகிறன்.

சந். என்ன! சிற்றப்பா! பாதி குடி ஆனற்போல் இருக்கிறது. அங்கே யார் வந்திருக்கிறது. தெரியுமா உனக்கு.

சோ. ஒரு பி-பி-பி. பிரபு.

சந். என்ன. நன்றுய்த்தான் சொல்லேன்.

சோ. ஒரு பி-பி-பி-பி; என்ன சாபு.

சாபு. வா, சோமநாதா! அம்மாளுக்குப் பதில் சொல்.

சந். சிற்றப்பா! இப்படிப் புத்தி மயக்கத்திற்கூட வெகு சீக்கிரமாகக் கூப்பிட்டவுடன் வந்துவிட்டீர்களே.

சோ. இன்னும் இரண்டு மொந்தை போட்டால் சரியாய்ப் போய்விடும். தெருவில் யாரோ வந்திருக்கிறரே.

சந். யாரது ? உனக்குத் தெரியுமா ? அதைத்தான் கேட்கிறேன்.

சோ. அது யாராவது இருக்கட்டும். எனக்கு நிற்கவும்கூட முடியவில்லை. நான் போகிறேன். (போகிறான்.)

சந். அடே சாபு! ஒருகுடியனை யாருக்கடா உபமானமாகச் சொல்லலாம். சொல் பார்ப்போம்.

சாபு. தண்ணீரில் முழுகிப்போகிறவன் அல்லது ஒரு மூடன் அல்லது ஒரு பைத்தியக்காரன். இவர்களுக்கு உபமானமாகச் சொல்லலாம். அளவுக்குமேல் ஒரு மொந்தை போட்டுவிட்டால் மூடன்! இரண்டு மொந்தை போட்டுவிட்டால் பைத்தியம்!! மூன்று மொந்தையும் போட்டுவிட்டால் தண்ணீரில் முழ்கிவிட்டவன் தான்!!!

சந். அடே! என் சிற்றப்பனைக் கூட்டிக்கொண்டுவந்து இங்கே உட்காரும்படி செய். அவன் மூன்று மொந்தை போட்டவன்.

சாபு. அம்மா! இதோ போகிறேன். எனக்குத்தான் பைத்தியமென்று பேர் வைத்துவிட்டீர்கள். மூடனை யார் போய் அழைத்துக்கொண்டு வருவது. பயித்தியம் தானே. (போகிறான்.)

மகிபாலன் பிரவேசிக்கிறன்.

மகி. அங்கு வந்திருக்கிறவன் உங்களோடு பேசவேண்டுமாம். உங்களுக்குடம்பு சௌக்கியமில்லை என்று சொன்னேன். அதை அவன் கேட்கவில்லை. நீங்கள் தூங்குகிறீர்கள் என்றும் சொல்லிப் பார்த்தேன்

அதையும் கேட்கமாட்டேன் என்கிறான். அவனுக்கு என்ன சொல்லி அனுப்புவது ? அம்மா.

சந். என்னோடு பேச முடியாதென்று சொல்லிவிடு.

மகி. அதையும் சொல்லிப் பார்த்தேன். அவன் கேட்கவில்லை.

சந். அவர் எப்படி இருக்கிறார் ?

மகி. எப்படியா ? மனிதர் மாதிரிதான் ! அவன் உங்களோடு பேசவேண்டுமென்கிறான். என்ன சொல்கிறீர்கள்.

சந். அவருக்கு வயது எவ்வள விருக்கும் ?

மகி. அவனுக்கு வயதாய்விட்டதென்று சொல்வதற்கும் முடியவில்லை. சிறு பையன் என்று சொல்வதற்குமில்லை. மிகவும் இனிமையாய்ப் பேசுகிறான்.

சந். சரி, அவரை உள்ளே வரச்சொல். நீலலோசனியைக் கூப்பிடு.

மகி. நீலலோசனி ! அம்மாள் கூப்பிடுகிறாள்.

சந். என்னுடைய முகத்துணியை எடு. ஜயசிங்கனிடமிருந்து தூதன் வந்திருக்கிறான். அவனைச் சற்று விசாரிப்போம். (முகத்துணியை எடுத்துப் போற்றிக் கொள்ளுகிறாள்.)

மிருகதிருஷ்ணிகை பாடிக்கொண்டு பிரவேசிக்கிறாள்.

'கானகத்தில் நாமலைந்து' என்கிற மெட்டு.

நாலைரு பெண்ணுக இந்த ஞாலத் தநுத்தது முதல்
கானிடைத் தனிப்பட்ட மானையொத்து வாடலானேன்
உடன் பிறந்தவ ளேடு ஓட மேறிக் கடலில் ஓடி
கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கிடவும் விதியோ ஐயோ
அலிவேடம் கொண்டரசர்க் காளுமாகித் தூதுமானேன்
தலை விதிவசமோ ஈதென் சாபவசமோ சம்போ (நாலை)

மிரு. இம்மாளிகையின் சொந்தக்காரியாகிய சீமாட்டி- யார் ?

சந். நீங்கள் வந்தகாரியத்தை என்னிடம் சொல்லுங்கள். அவளுக்காகப் பதில் சொல்வேன்.

மிரு. அம்மா ! நீங்கள்தான் அச் சீமாட்டி-யோ ? நான் அவளைப் பார்த்த தில்லை.

சந். நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் ?

மிரு. அச்சீமாட்டி யாரென்று எனக்கு உறுதியாச் சொல் லும் வரையில், நான் என்னிருத்தாந்தம் ஒன்றும் சொல்லமாட்டேன். நான் மிகவும் கஷ்டப் பட்டு இங்கு வந்திருக்கிறேன். நீங்கள்தான் சீமாட்டியோ?

சந். ஆமாம். என்ன விசேஷம் ?

மிரு. நான் சொல்லக்கூடிய விஷயம் உங்கள் காதுக்கு மாத் திரந்தான் படவேண்டும். ஆனல் எல்லாம் நல்ல சமா சாரந்தான்.

நீல. (ஒரு புறமாக) யாரடா ! இவன்நமக்குத் தெரியாத சமாசாரத்தைச் சொல்லப் போகிறனாமே. (மிருக திருஷ்ணிகையைப் பார்த்து) ஐயா ! வாசற்கதவு திறந்து வைத்திருக்கிறேன். நீங்கள்வந்து அதிக நாழியாய் விட்டது. போகலாமே !

மிரு. அம்மா ! அவ்வளவுசீக்கிரம் நான் போய்விட மாட் டேன். நான் வந்த காரியம் இன்னும் பேசி முடிய வில்லை.

சந். சரி, நீலலோசனி ! நீங்கள் எல்லோரும் சற்று விலகி இருங்கள். (நீலலோசனி போகிறுள்.)
ஐயா ! சமாசாரம் என்ன ?

மிரு. சந்திரபிம்பத்தை யொத்த முகத்தையுடைய மாதே!

சந். பேஷ்! என்னைப் புகழ்ந்துபேசவா இங்கு வந்தீர்கள். இந்த வார்த்தைகளை எல்லாம் எந்தப் புஸ்தகத்திலிருந்து கற்றுக்கொண்டீர்கள்?

மிரு. ஜயசிங்கனின் இருதயமாகிய புத்தகத்திலிருந்து.

சந். ஓகோ! அந்தப் புத்தகத்தினின்று, எந்த அத்தியாயம்?

மிரு. அப்புத்தகத்தின் முதலத்தியாயம்.

சந். ஜயசிங்கனுடைய இருதயமாகிய புஸ்தகத்தை நான் வாசித்திருக்கிறேன். வேறுவிசேஷம் ஒன்றுமில்லையே.

மிரு. சந்திரவதனை! எங்கே! உன் முகத்தைக் காட்டு பார்ப்போம்.

சந். ஜயசிங்கன் என் முகத்தோடு பேசும்படி உங்களுக்கு ஏதாவது சொல்லி அனுப்பித்தனரே? நீங்கள் வந்த காரியம் இதுதான் போலிருக்கிறது. இருக்கட்டும். இதோ பார்த்தீர்களா என் முகத்தை. நன்றாய் இருக்கிறதா? (முகத்தைக் காண்பிக்கிறாள்.)

மிரு. இம்முகம் பிரம்மதேவனால் உண்டாக்கப்பட்டதோ! அல்ல.

சந். ஐயோ! இது ஒரு அழகென்று என்னைச் சொல்லலாமா?

மிரு. பெண்மணி! இதுதான் அழகு! ஆனால் நீங்கள் மிகவும் கடின நெஞ்சுடையவராகத் தோன்றுகிறீர்களே! இப்படிப்பட்ட அழகைப் பார்த்து சந்தோஷப்படக்

கூடிய ஒரு கணவனேடு கூடி வாழாமல் வியர்த்தமாய் இவ்வழகை வீணுக்குவது நன்றன்று.

சந். ஐயா! நான் அவ்வளவு குரூர நெஞ்சுடையவளாய் இருக்கமாட்டேன். உங்களை ஜயசிங்கன் என்னைப் புகழ்ந்து பேச அனுப்பினனே?

மிரு. மாதாசே! நான் ஜயசிங்கனிடமிருந்துதான் வந்தேன். இப்புவிதனில் ஒருவரும் கொள்ளாத காதல் அவர் உங்கள்பேரில் கொண்டிருக்கிறார்.

சந். அவன் என்மேல் எவ்விதம் காதல் கொண்டிருக் கிறான்? உங்களுக்குத் தெரியுமா?

மிரு. அவர் எப்பொழுதும் உங்களை நினைந்து நினைந்து உருகிக் கொண்டிருக்கிறார். இவ்வுலகம் அவருக்கு விசன மாகவே தோன்றுகின்றது.

சந். உங்கள் அரசன், இன்ன சொல்வானென்பதை நான் அப்பொழுதே தெரிந்துகொண்டிருக்கிறேனை! நான் அவனை மணம்புரிய மாட்டேன்: அவன் மிகவும் பணக்காரனாயிருந்தபோதிலும், அதிகம் படித்திருந்த போதிலும் நான் அவனை மணந்துகொள்ளமாட்டேன்.

மிரு. பெண்மணீ! அரசனுக்குப் பதிலாக நான் உங்கள் மேல் காதல் கொண்டிருக்கும்பட்சத்தில் நீங்கள் இப் படி வெறுப்பதற்கு எனக்குக் காரணமே தோன்றுது.

சந். நீங்கள் என்பேரில் காதல்கொண்டால் என்ன செய் வீர்கள்?

மிரு. என்ன செய்வதா! எப்பொழுதும், சந்திரவதனை! சந்திரவதனை!! என்று சொல்லிக்கொண்டு என் மனம் முழுதையும் உங்களிடத்திலேயே வைத்துவிடுவேன்.

சந். நீங்கள் இன்னம் அதிகங்கூடச் செய்வீர்கள். நீங்கள் நல்ல குலத்தில் பிறந்தவரா?

மிரு. நான் ஒரு கனவான். ஒரு நல்ல குலத்தில் பிறந்தவன் தான்.

சந். உங்கள் அரசனிடம் சென்று நான் அவனை மணந்து கொள்ளமாட்டேன் என்று சொன்னதாகச் சொல்லி விடுங்கள். அவன்விஷயமாக நீங்கள் மறுபடியும் வர வேண்டாம். நீங்கள் போய் வரலாம்.

மிரு. (கோபத்துடன்) மாதே! என் அரசன் எவ்விதம் உங்களை நினைந்து வருத்தப்படுகிறாரோ, அவ்விதமே நீங்களும் ஒரு ஆடவனை நினைந்து வருத்தப்படவேண்டியதுதான். நான்போய் வருகிறேன். (போகிறாள்.)

சந். (தனக்குள்ளே) நான் 'நீங்கள் நல்ல குலத்தில் பிறந்தவரா' என்று கேட்டேன். அவர் 'நான் ஒரு கனவான், என்று பதில் சொன்னார். ஆமாம் நிஜமாகவே கனவான்தான். ஆ! அவர் முகம் எவ்வளவு தேஜஸோடு கூடி இருக்கிறது. ஐயோ! அவரை நினைந்தால் என் மனம் உருகுகின்றதே! யான் என்ன செய்வேன் ஆகட்டும் பார்ப்போம். மகிபாலா! (கூப்பிடுகிறாள்.)

மகிபாலன் பிரவேசிக்கிறான்.

மகி. அம்மா! இதோ வந்துவிட்டேன்.

சந். மகிபாலா! அதிசீக்கிரம், இங்கு வந்திருந்தவர் பின் சென்று இம்மோதிரத்தை அவரிடம் கொடுத்துவிட்டு வா. அவர், மோதிரத்தை இங்குவிட்டுப் போய்விட்டார். அவரை நாலைபதினம் இவ்விடம் கொஞ்சம் வந்துவிட்டுப் போகச்சொல். சீக்கிரம் போ.

மகி. இதோ! போகிறேன்.

சந். ஆ தெய்வமே! என் எண்ணத்தைப் பூர்த்திசெய்ய லாகாதா! எல்லாம் உன் திருவருளின் செயலன்றோ? பார்ப்போம். (போகிறாள்.)

முதலங்கம் முற்றிற்று.

இரண்டாம் அங்கம்.

முதல் காட்சி.

கடற்கரையில் சாந்தசீலனும், அஜிட்சிங்கும் பிரவேசிக்கிறார்கள்.

அஜி. நீ இன்னும் சிறிதுநேரம் இங்கு இருக்கமாட்டாயா? அல்லது நீ போகுமிடம் நானும் வருகிறேன்.

சாந். அஜிட்சிங்! நானே மிகவும் பாவம் செய்தவன். எனக்கு நேரிடாத துன்பங்க ளெல்லாம் நேரிடுகிறது. நீ என்னோடு வந்தால் உனக்குந் துன்பங்கள் நேரிடும். ஆகையினால் நான்மாத்திரம் போய் வருகிறேன். எனக்கு உத்தரவு கொடு.

அஜி. சரி, அப்படியானால் நீ எங்குபோவதாக உத்தேசம். எனக்குத் தெரிவிக்க லாகாதா?

சாந். நீ என்னுயிரைக் காப்பாற்றியவனானதால் உனக்கு நான் அதையும் வெளிப்படுத்துவது நியாயமே. இது வரையில்நான் ஒருவருக்கும் என் விருத்தாந்தத்தைத் தெரியப்படுத்தவில்லை. என் பெயர் சாந்தசீலன் என்று சொல்வார்கள். நான் சௌராஷ்டிர மகாராஜா

வின் புதல்வன். எனக்கு ஒரு சகோதரியுமிருந்தாள். நாங்கள் இரண்டுபேரும் ஒரே காலத்தில் பிறந்தோம். அவள் கப்பல் உடைந்து மூழ்கி இறந்துவிட்டாள். நீ எனக்கு உதவிபுரியாமலிருந்திருக்கும் பட்சத்தில் நானும் அதே கதியை அடைந்திருப்பேன்.

அஜி. உன் சரித்திரம் மிகவும் பரிதபிக்கத்தக்கதா யிருக்கின்றது. ஐயோ பாவம்!

சாந். என் சகோதரி என்னைப்போலவே இருப்பாள். என்னைப் பார்த்தால் அவளைப் பார்க்கவேண்டியதில்லை. அவள் உடம்பின் அழகைப் போலவே, உள்ளமும் அழகாயிருக்கும். அவளைப்போல் ஒரு சகோதரி எனக்குக் கிடைக்கவேமாட்டாள். நீ எனக்குச் செய்த உபகாரத்தை நான் ஒருபொழுதும் மறக்கமாட்டேன்.

அஜி. சாந்தசீலா! எனக்கு உன்பேரிலிருக்கும் அன்பால் உன்னைத் தனியாய் விட எனக்கு மனம் வரவில்லை. நானும் உன்கூட வரக்கூடாதா?

சாந். அஜிட்சிங்! எனக்கு உன்பேரில் இருக்கும் அன்பு தான், உன்னை என்னோடு வரக்கூடாது என்று தடுப்பது. நான் ஜயசிங்க மகாராஜனிடந்தான் போகிறேன். எனக்கு உத்தரவு கொடு. (போகிறான்.)

அஜி. கடவுள் உன்னை இரட்சிப்பாராக. ஜயசிங்க மகாராஜனுடைய சபையில் எனக்கு அனேகம் விரோதிகளிருக்கிறார்கள். இல்லாவிட்டால் நான் உன்னோடு வந்திருப்பேன். ஆனால் எது எவரினும் வரட்டும். மித்திரனுக்காக உயிரை விடுவதும் நலம். கருப்பை

நுனியிலிருந்து தின்று கொண்டுபோனால் எவ்விதம் மதுரம் அதிகரித்துக்கொண்டிருக்குமோ அவ்வித மல்லவா இருக்கவேண்டும் சினேகம். ஆகையால் நானும் நீ சொல்லுமிடத்திற்கே வருகிறேன்.

(போகிறான்.)

இரண்டாம் காட்சி.

நகரத்தின் ஒரு வீதியில் மிருகதிருவ்ணிகையும்
அவளைப் பின்தொடர்ந்து மகிபாலனும்
பிரவேசிக்கிறார்கள்.

மகி. ஐயா! நீங்கள்தானே இப்பொழுது சந்திரவதனியிடம் வந்திருந்தது?

மிரு. ஆமாம். என்னால் நடக்க முடியாததினால் மெள்ள மெள்ளச் சென்றுகொண்டிருக்கிறேன்.

மகி. உங்கள் மோதிரத்தை நீங்களே எடுத்து வந்திருந்தால் எனக்குக் கஷ்டமில்லாமலிருந்திருக்கும். அதை உங்களிடம் சந்திரவதனி கொடுக்கச் சொன்னாள். நீங்கள் அங்கு இம்மோதிரத்தை விட்டுவிட்டு வந்தீர்களாம். மேலும் அரசனிடம் அவளைப்பற்றி புகழ்ந்து பேசவேண்டாம் என்று உங்களிடம் சொல்லச் சொன்னாள். இதோ இம்மோதிரத்தை வாங்கிக் கொள்ளுங்கள்.

மிரு. என் மோதிரத்தை நான் அங்கே போட்டுவிட்டு வந்தேனே? இல்லையே. இது என் மோதிரமல்ல. நான் வாங்கிக்கொள்ள மாட்டேன்.

மகி. நீங்கள் அவளிடம் போட்டுவந்தீர்களாமே. எனக்குத் தாமதிக்கமுடியாது. இதோ கீழேவைத்திருக்கிறேன்.

வேண்டுமானால் எடுத்துக்கொள்ளுங்கள். இல்லாவிடில் வேறு யார் பார்த்தபோதிலும் எடுத்துக்கொள்ளட்டும்.

(போகிறான்.)

மிரு. (தனக்குள்) அவளிடத்தில் என் மோதிரத்தை நான் போட்டுவரவில்லையே. அவள் இப்படிச் செய்வதற்குக் காரணம் என்ன? அவள் என்னைக் கண்கொட்டாமல் பார்த்தபோதே எனக்குத் தெரிந்துவிட்டது. அவள் மனதில் இருப்பதை எல்லாம் அவள் கண் இரண்டும் எனக்கு வெளியாக்கிவிட்டது. அவள் கட்டாயம் என்மேல் காதல் கொண்டிருக்கிறாள். ஐயோ பாவம்! அவள் என்மேல் மோகங் கொண்டிருப்பதினால்தான், தன் வேலையாள் மூலமாய் இம்மோதிரதனை கொடுத்தனுப்பி யிருக்கிறாள். இது மிகவும் வேடிக்கையாகத்தானிருக்கிறது. என்மேல் காதல் கொள்வதைவிட கனவில் காணும் ஒரு ஆடவன்மேல் காதல் கொள்வது மிகவும் நலம். ஆ! மாறுவேடம் பூண்பதின் பலனை இப்பொழுதுதான் கண்டறிந்தேன். ஐயோ! ஸ்திரீகளின் புத்தி இவ்வளவுதான். ஒரு பிரதிமையை யெளவன புருஷன்போல் வேடம்போட்டு அவர்களிடம் கொண்டுபோய் வைத்தால் அதையும் நிஜபுருஷன் என்று எண்ணி, அதன்பேரில் காதல் கொள்வார்கள். ஸ்திரீகளாகிய எங்களுடைய குணமே இதுதான். அதிக மோகங் கொண்டவர்கள் இம்மாதிரி தான் ஏமாந்து போவது. என் யஜமானனுகிய ஜயசிங்கன் இவள்மேல் காதல்கொண்டிருக்கிறான். இவளோ என்னைப் புருஷன் என்று எண்ணி என்மேல் மோகங் கொண்டிருக்கிறாள். நாளை ஜயசிங்க மகாராஜனை மணம்புரிய எண்ணிக் கொண்டிருக்

கிறேன். இது கடைசியில் எவ்விதம் முடியும்? நான் புருஷவேடம் பூண்டிருப்பதால் சந்திரவதனை என்னை நேசிக்கிறாள். இப்படி நேசிப்பது அரசனுக்குத் தெரிந்தால் என் தலை போய்விடுமே. நான் என்னை ஸ்திரீ என்றுசொல்லி விட்டால் சந்திரவதனியின்மனதிற்கு எவ்வளவு வருத்தம் உண்டாகும். இது ஒரு பெரிய புதிராகத் தானிருக்கிறது. இதை நம்மால் விடுவிக்கமுடியாது. சகல வல்லமையுள்ள கடவுள்தான் விடுவிக்கவேண்டும்.

(போகிறாள்.)

மூன்றாம் காட்சி.

சந்திரவதனியின் மாளிகையில் சோமநாதனும் பூபேந்திரனும் பிரவேசிக்கிறார்கள்.

சோ. பூபேந்திரா! சீக்கிரம் வா. நேரமாகிறது. நாம் இரவு முழுதும் விழித்துக்கொண்டிருந்தால்தான் நம்மை எல்லோரும் காலையில் அதிசீக்கிரம் எழுந்துவிடுகிறோம் என்று சொல்வார்கள்.

பூ. நீ சொல்வது தப்பு. இப்பொழுது தூக்கம் விழித்தால் தான் காலையில் நன்றாய்த் தூங்கிவிடுவோம்.

சோ. சீ! அப்படியல்ல! நாம் தூங்கவே கூடாது. சாராயஜாடியைப் பார்த்துவிட்டால் தூக்கங்கூட வருமா? என்ன! உனக்குத் தெரியாதா? பஞ்சபூதத்தினால் ஆகிய இவ்வுடம்பை எடுத்ததற்கு என்ன பிரயோசனம்? குடிப்பதுதானே?

பூ. நம் உடம்பைப் பஞ்சபூதந்தான் என்று சொல்கிறார்கள். ஆனால் எனக்குக் குடிப்பதும் தின்பதும்தான் என்று தோன்றுகிறது.

சோ. நீ மிகவும் படித்தவன். நீ சொல்வதிற்கூட பிழை உண்டா? சரி நாம் குடிப்போம் வா. எங்கே மொந்தை?

சாபு பிரவேசிக்கிறன்.

பூ. இதோ சமயத்திற்குச் சாபுவும் வந்துவிட்டான். அடே சாபு! நினைக்க நினைக்க உனக்கு அற்பாயசு வா!

சாபு. பூபேந்திரா! நாம் மூன்றுபேரும் கூடிப்பேசி அதிககாலம் ஆய்விட்டதல்லவா?

சோ. அடே தடியா! அதை எல்லாவற்றையும் கட்டிவை. எங்கே ஒரு பாட்டுச் சொல் பார்ப்போம்.

பூ. சாபு! ஆமாண்டா! உன் குரல் கோகிலம் போலிருக்கிறது. எனக்குமாத்திரம் உன் குரல் இருந்தால் என்ன சொல்கிறாய்? நேற்றையதினம் நீ மிகவும் சாதுரியமாகப் பேசிக்கொண்டிருந்தாயே அதேமாதிரி இங்கே சொல் பார்ப்போம். நான் உன் மனைவிக்கு அரை அணை அனுப்பினேன். அது வந்து சேர்ந்ததா?

சாபு. என் மனைவிக்கு அனுப்பினையல்லவா ஆதலால் அதைப் புருஷன் எடுத்துக்கொண்டு விட்டான்.

பூ. பேஷ்! இவ்வளவு சாதுரியமா யார் பேசப் போகிறார்கள்? எங்கே ஒரு பாட்டுச் சொல்.

சோ. சாபு! இதோ நானும் உனக்கு அரையணைக் கொடுக்கிறேன். ஒரு பாட்டு.—

பூ. சோமநாதன் கொடுத்தால் நானும் மறுபடியு தருகிறேன். சொல்.

சாபு. உங்களுக்குக் காதலைக் குறித்த பாட்டு வேண்டுமா?
அல்லது ஒரு நீதியைக் கற்பிக்கும் பாட்டுவேண்டுமா?

சோ. காதல் பாட்டு! காதல் பாட்டு!

(தலையை யாட்டுகிறான்.)

பூ. நீதிப்பாட்டு பாருக்குவேண்டும். நீதியை எல்லாம் மீதி பாய் வைத்திரு.

சாபு. (பாடுகிறான்)

ராகம் - ஹம்சத்துவனி.

ஹரிநீ - மனக என்கிற மெட்டு.

பல்லவி.

கண்மணியே உன்னைக் கண்டதுமுதல்
காதல் கொண்டேனே—பெண்மணீ (கண்)

அநுபல்லவி.

அன்னநடையாளே மின்னலிடையாளே
கன்னல்மொழியாளே—உன்னை (கண்)

சோ. பேஷ்! பேஷ்!!

பூ. அடே முழுக்கச் சொல்லியாகட்டும்.

சரணம்.

ரதியோநீ சந்திரவதியே உன்னைத் தந்திரமாகவேகூடி
களித்துச் சுகிப்பவர்க்கு இன்பமும் வேறுளதோபுவியில்
இதழமுதம் தந்தருளுவாய் மந்தகாசத்துடன் நீ (கண்)

சோ. பேஷ்!

பூ. அடாடா! என்ன குரல்!!

சோ. பேஷாத்தான் இருக்கிறது! ஆனால் பலமாய்க் கத்த

வேண்டும். நாம் மூன்று பெயரும் சேர்ந்து பலமாய்ப் பாடித் தூங்குகிறவர்களை எல்லாம் எழுப்பிவிடலாமா?

பூ. நீ சொல்வதற்குத் தடையுமுண்டோ? சரி நாமெல்லோரும் பாடுவோம் 'அடே மடையா' என்பது பல்லவியா யிருக்கட்டும்.

சாபு. (பாடுகிறான்) 'அடேமடையா நீபடபடவென்று குதித்தாயேடா' பூபேந்திரா! பார்த்தாயா! உன் பேரிலேயே பாட்டுக் கட்டிவிட்டேன்.

பூ. உனக்கென்னவேலை; என்னை நீ மடையன் என்றுசொல்வது அதிசயமோ! போதும் வாயை மூடிக்கொண்டு பாட்டை மாத்திரம் பாடு.

சாபு. நான் வாயை மூடிக்கொண்டால் எப்படிப் பாட்டுப் பாடுவது?

பூ. அதெல்லாம் இருக்கட்டும்; பாடு.

நீலலோசனி பிரவேசிக்கிறாள்.

நீல. இதென்ன! தடபுடல் செய்துகொண்டிருக்கிறீர்களே! இது சந்திரவதனிக்குத் தெரிந்தால் மகிபாலனைக் கொண்டு உங்களை எல்லோரையும் வீட்டைவிட்டுத் துரத்தச் சொல்வாள்.

சோ. ஆமாம்! சந்திரவதனி ஒரு பயித்தியம்! மகிபாலன் ஒரு தடியன்! எங்கள் மூன்று பேரையும் பார். எப்படிப் பாடுகிறோம்! (பாடுகிறார்கள்)
'அடே மடையா நீ படபடவென்று குதித்தாயே.'

சாபு. தேவலாமே! சோமநாதன் பேஷ்!

பூ. அவனுக்காகச் சந்தோஷம் பிறந்தபோது அவனைக் கூத்து செய்வதில் யாராவது வெல்லமுடியுமா?

சோ. (பாடுகிறான்) 'அடே மடையா நீ படபடவென்று குதித்தாயே குதித்தாயே'

நீல. உனக்குப் புண்ணியமாய்ப்போகிறது. கொஞ்சம் பேசாமலிரு.

மகிபாலன் பிரவேசிக்கிறான்.

மகி. இதென்ன! உங்களுக்குப் பயித்தியம் பிடித்து விட்டதா? உங்களுக்கு மரியாதை மட்டு ஒன்றும் தெரியவில்லை போலிருக்கிறதே; என் எஜமானியின் வீட்டை ஒரு கள் கடையாகவா செய்து விடுகிறீர்கள்? பாடுவதற்குக் காலம் நேரம் ஒன்றுமில்லையா? நிறுத்துங்கள் போதும்.

சோ. மகிபாலரே! நாங்கள் பாடும்போது காலம் விடாமல் தாளம் போட்டுத்தான் பாடிவேண்டும். காலம் இல்லை என்று சொல்கிறீரோ?

மகி. சோமசர்தா! உன்னிடத்தில் இனி நான் கண்டிப்பாயிருக்கவேண்டும். உன்னைச் சந்திரவதனி உறவினன் என்று தன் வீட்டில் வைத்துக் கொண்டிருந்த போதிலும், நீ அத்துமீறி நடந்தால், உன்னைவீட்டைவிட்டு வெளியே யனுப்புமபடி என்னிடம் சொல்லியிருக்கிறாள். நீ எதுவரையில் மரியாதையா யிருக்கிறாயோ அதுவரையில் தான் உனக்கும் மரியாதைகிடைக்கும்.

சோ. சந்திரவதனியே என்னைப் போகச்சொன்னால் நான் போகிறேன். நீ என்ன மதியில்.

நீல. சோமசர்தா! அவன் உளறுகிறான். நீ போகிறதாவது.

சாபு. அந்தத் தடியன் சொல்வதை நீ ஏன் கேட்கிறாய்?

மகி. அது அப்படியா! நான் தடியன் தான்.

சோ. நான் மாத்திரம் சாகாமல் பிழைத்திருக்க வேண்டும்!

சாபு. அது உன்னாலேயும் முடியாது, உன் தாத்தாவாலும் முடியாது.

சோ. மகிபாலரே! ஏன் இங்கு நின்றுகொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் போகலாம். நீலலோசனி! எங்கே! சாராயம் ஒரு கோப்பையிற் கொண்டுவா குடிக்கலாம்.

மகி. நீலலோசனி! நீயும் இவர்களோடு சேர்ந்து விட்டாய் போலிருக்கிறது. இவைகளை எல்லாம் நான் சந்திரவதனியிடம் தெரிவிக்காமற் போனால் என்பெயர் மகிபாலனல்ல. (போகிறான்)

நீல. உன் பெயர் மகிபாலனா? தடியன் என்று தான் சாபு பேர் வைத்துவிட்டானே!

பூ. சீ! பாவம்! மகிபாலனைச் சண்டைக்கும் இழுத்து விட்டு அவனை இம்மாதிரி அவமானப்படுத்தியும் அனுப்பலாமா? இது நன்றுயில்லை.

சோ. பூபேந்திரா! உன் மனதில் அவனோடு நன்றுய்ச் சண்டை பிடிக்கவில்லை என்கிறகுறைதானே? இதோநாளை யதினம் அவனை அழைத்துக்கொண்டு வருகிறேன். நீ அவனோடு உன்னால் ஆனமட்டும் சண்டைப்பிடி.

நீல. சோமநாதா! உனக்கு வருத்தம் ஏன்? நம் சந்திரவதனை ஜயசிங்கனிடமிருந்து வந்த கனவானைக் கண்டது முதல் அவளுக்கு மனது இங்கு இல்லை. மகிபாலன் சொல்வது அவள் காதில் விழப் போகிறதா? இதோ பார்! நான் ஒரு தந்திரம் செய்து மகிபாலனை முழுப் பயித்தியமாகச் செய்யப்போகிறேன். நீ பயப்பட வேண்டாம்.

சோ. அதெப்படி? அது எப்படி? எங்களுக்குச் சொல்லக்கூடாதா?

நீல. நான் நாளையதினம் மகிபாலன் வரும் வழியில் ஒரு கடிதத்தைப் போடப் போகிறேன். நான் சந்திரவதனை எழுதுவது போலவே எழுதுவேன். அக் கடிதத்தில் சந்திரவதனி மகிபாலன் பேரில் காதல் கொண்டிருப்பதாக, அவள் எழுதினது போலவே எழுதி அதை வழியில் போட்டுவிடப் போகிறேன். அப்புறம் நடப்பதைப் பாருங்கள்.

சோ. பேஷ்! பேஷ்! நல்ல யுக்தி.

பூ. இந்தத் தந்திரம் அவனிடம் நன்றாய்ப் பலிக்கும்.

சோ. கடிதத்தைப் பார்த்துவிட்டு, சந்திரவதனி தன்பேரில் நிஜமாகவே காதல்கொண்டிருக்கிறாள் என்று அவன் எண்ணிக்கொள்வான்.

நீல. அப்படி அவன் எண்ணுவதற்காகத் தான் நான் கடிதத்தைப் போடுவது.

பூ. பேஷ்! அப்படியே செய்.

நீல. சரி நாளைபதினம் அப்படியே செய்வோம். நீயும், பூபேந்திரனும், சாபுவும் மகிபாலன் கடிதம் படிக்கும் போது பார்த்துக் கொண்டிருங்கள். மணி அதிகம் ஆய்விட்டது. நான் படுக்கைக்குச் செல்கிறேன்.

(போகிறாள்)

பூ. சோமநாதா! நீலலோசனியைப் பார்த்தாயா எவ்வளவு தந்திரசாலி.

சோ. அவள் தந்திரம் நீ என்ன கண்டாய். எனக்குத் தெரி

யும் முழுதும். நாம் படுக்கைக்குப் போவோம் வா. பூபேந்திரா! ஒரு வார்த்தை, நாளையதினம் ஊருக்குப் பணத்திற்குச் சொல்லி அனுப்பு.

பூ. என்னைச் சந்திரவதனை மணம்புரிவதா யிருந்தால்தான் பணம் தருவிப்பேன்.

சோ. நீ அதற்குப் பயப்படவேண்டாம். நானிருக்கிறேன் நீ பணம் முதலில் கொண்டுவா.

பூ. சரி ஆகட்டும்.

சோ. படுக்கைக்குப் போகலாம். போகிறபொழுது ஒரு மெய்ந்தை விட்டால் தான் சரியாயிருக்கும்.

(குடித்துவிட்டுப் போகிறார்கள்)

நான்காம் காட்சி.

ஜயசிங்கனின் மாளிகையில் ஜயசிங்கன், கருணாகரன், மிருக திருஷ்ணிகை இவர்கள் பிரவேசிக்கிறார்கள்.

ஜய. என் மனக்கவலை தீரும்படி சற்று நல்ல கீதங்களைப் பாடுங்கள். சாரசா! நேற்று ஒருவன் இங்கு வந்து பாடினானல்லவா? அவன் பாடியது மிகவும் புராதனமா யிருந்தபோதிலும் எனக்கு மிகவும் ஆனந்தத்தை உண்டு பண்ணிற்று. என் மனை வியாகூலமெல்லாம் அதைக் கேட்ட மாத்திரத்தில் சூரியனைக் கண்ட பனி போல் மறைந்து விட்டன. அந்தப் பாட்டை மறுபடியும் கேட்டால் மிகவும் நன்றாயிருக்கும்.

கரு. அரசே! நேற்றுப் பாடியவன் இப்பொழுது இங்கில்லையே.

ஜய. நேற்றுப் பாடியவன் யார்?

கரு. சந்திரவதனியின் வீட்டிலிருக்கும் விகட கவியாகிய சாபுதான் நேற்றுப் பாடியது. அவன் அங்கேதானிருப்பான்.

ஜய. அப்படியா! சந்திரவதனி தான் என் மனதை இழுத்துக் கொண்டாள் என்றால், அவள் வீட்டு விகட கவி கூடவா அப்படிச்செய்யவேண்டும். அவனைப் போய் அழைத்து வாருங்கள்! அவன் பாட்டைக் கேட்க வேண்டும். (கருணாகரன் போகிறான்)

சாரசா! நீயும் ஒரு மாதின்மீது காதல் கொள்ளும்போது என்னை நினைத்துக்கொள். காதல் கொண்டவர்கள் என்னைப் போலிருப்பது சகஜம். நீயும் ஒரு பெண்மணியின் மீது மோகம் கொண்டபோது வேறு வேலையும் தோன்றாமல் அம்மாதையே நினைந்து வருந்துவதுசகஜமே. நேற்றுக்கேட்டாயே அப்பாட்டு உனக்கெப்படி இருந்தது?

மிரு. அரசே! என் மனதிலுள்ள காதலை அதிகரிக்கச் செய்தது.

ஜய. அடே! நீயும் அப்படியானால் காதல் கொண்டிருக்கிறாயா என்ன?

மிரு. உங்களிடம் வந்தபிறகு தான் நானும் காதல் கொண்டேன்.

ஜய. நீ மோகங் கொண்டிருக்கும் மாது எப்படிப்பட்டவள்?

மிரு. உங்கள் நிறத்தைப் போல்தானிருப்பாள்.

ஜய. சீ! என்னிறத்தைப் போலிருந்தால் உன் அழகுக்கு அவள் ஒத்தவளல்ல. அவளுக்கு வயது என்ன இருக்கும்?

மிரு. உங்கள் வயதுதான் அவளுக்கு மிருக்கும்.

ஜய. என் வயதிருந்தால் அவள் உன் வயதிற்கேற்றவளல்ல. ஆனல் உன்பேரில் பிழையாது? நம்மனதுதான் எதற்கும் காரணம். நாம் எவள் பேரில் மோகங்கொள்கிறோமோ அவளே நமக்கு ரம்பையாகத் தோன்றுவாள். அவளையே தான் நாம் புகழ்ந்து பேசுவோம்.

மிரு. நானும் அம்மாதிரிதான் எண்ணுகிறேன்.

ஜய. ஆனலும் நீ ஆசைப்படும் மாது நல்ல யௌவனமுள்ளவளா யிருக்கட்டும். எனெனில் ஸ்திரீகள் ரோஜாபுஷ்பத்தைப்போல் வாடிவிட்டால் அவர்கள் அழகுகுன்றிவிடும்.

மிரு. ஆமாம் நான் எல்லாவற்றையும் யோசித்துத் தான் ஒருத்திமேல் காதல் கொண்டேன்.

கருணகரனும் சாபுவும் பிரவேசிக்கிறார்கள்.

ஜய. அடே சாபு! வா நேற்றையதினம் பாடியதுபோல் சற்றுப்பாடு கேட்போம். சாரசா! இவன் பாட்டைச் சற்றுக்கேள். அதுமிகவும் இனிமையா யிருக்கின்றது. இவன் குரல் மிகவும் கம்பீரமா யிருக்கிறது. இவன் விகட கவி ஆச்சே! இவனுக்கு இப்படிப்பட்ட குரல் எங்கிருந்து வந்திருக்கும்? இது மிகவும் ஆச்சரியந்தான்.

சாபு. ஐயா! என் பாட்டைக் கேட்கத் தயாரா யிருக்கிறீர்களா?

ஜய. ஆம்! எங்கே பாடு.

சாபு. (பாடுகிறான்)

ராகம் - மணிரங்கு.

இகனனை என்கிறமெட்டு.

பல்லவி.

வருவாயே வரு–வாயே இந்தவேளை
கருணைகரனே கலாத்மகனே (வரு)

அநுபல்லவி.

காரிகைமீது காதல்கொண்டே யெந்
நேரமும்நினைந்து நிந்தைதக்குள்ளானேன் (வரு)

சரணம்.

வங்கநாட்டுக்கே மன்னனுமாகினேன்
அங்கநாடெல்லாம் ஆட்சிக்குள்ளாக்கினேன்
தையல்மணங்கொள்ளச் சந்ததம்நினைந்து
துயரப்படுவது போதும்போதுமையா (வரு)

பெண்ணின்மனதன்மேல் பிரியங்கொள்ளாதாசொல்
கண்மணியே நீயே கருதிப்பாராயோ
அந்தரங்கமாய் அளிப்பாயொருமுத்தம்
சொந்தமாய்என்னோடு சுகிப்பாய்இன்றோடு (வரு)

ஐய. ஆ! எவ்வளவு இனிமையா யிருக்கிறது. என் நிலை மையை நன்கெடுத்துரைத்தாய்; உன் கஷ்டத்திற்காக இந்த சவரனை வாங்கிக்கொள். (சாடு. ஐயா! நான் பாடுவதில் எனக்குக் கஷ்டமில்லை. எனக் குச் சுகந்தான்.

ஐய. சரி அப்படியானால் நீ சுகப்படுவதற்காக இந்தா சவரன்.

சாடு. இப்பொழுது சுகப்பட்டால் பின்னல் கஷ்டப்படுவது நிஜம். ஆகையால் நான் சவரனை வாங்கிக் கொண்டால் மிகவும் கஷ்டத்திற் காளாவேன்; எனக்குவேண்டாம்

ஜய. சரி நீ போய் வருகிறுயா ?

சாபு. துர் அதிர்ஷ்ட தேவதைகளெல்லாம் தங்களைக் காப் பாற்றட்டும். தங்கள் நிலைமையைப்பார்த்தால் எனக்கு விசனமாகத் தானிருக்கிறது. என்ன செய்யலாம் ? இவை எல்லாம் தானே செய்துகொண்ட அனர்த்தம். நான் போகிறேன். (போகிறான்)

ஜய. சாரசனைத் தவிர மற்றவர்களெல்லாம் போகட்டும்.

(கருணைகான் போகிறான்)

சாரசா ! நீ மறுபடியும் சந்திரவதனியிடம் செல்ல வேண்டும். நான் அவள்பேரில் அதிக ஆவலாகக் காதல் கொண்டிருக்கிறேன் என்று அவளுக்குத் தெரிவி. அவள் என்மேல் மோகித்தால் என் ஐசுவரி யத்தை எல்லாம் கொடுத்து விடுவேனென்றும் தெரிவி. சீக்கிரம் போ.

மிரு. நான் போகிறேன் அவள்தான் உங்களை மணம் செய்து கொள்ள மாட்டேனென்று சொல்லிவிட்டாளே. அவ ளிடம் அடிக்கடி போவானேன் ?

ஜய. நீ இப்போது போய்ப் பார்த்துவிட்டுவா. அவள் இப் போது அம்மாதிரி சொல்லமாட்டாள்.

மிரு. நீங்கள் அவள்பேரில் இவ்விதம் மோகங் கொள்வா னேன் ? நீங்கள் அவளிடம் ஆசைகொண்டிருப்பது போல் பதின்மடங்கு அதிகமாக வேறொருமாது உங் கள்மேல் காதல் கொள்ள மாட்டாளா ? அவளா சையை விட்டொழிக்க லாகாதா ?

ஜய. நான் அவளிடம் வைத்திருக்கும் ஆசையைப்போல் என்னிடம் வேறொரு மாது வைத்திருப்பது அசாத்

திபம். புருடர்கள் தான் பெண்களின் மீது அதிகக் காதல் கொள்வார்கள். பெண்கள் அப்படிக் காதல் கொள்வதே யில்லை. பெண்களின் ஆசை நாவில் மாத்திரந்தான். உள்ளத்தில் இருக்கவேமாட்டாது. புருடனே அந்தரங்கமாகவே காதல் கொள்வான். ஆகையால் நான் கொண்டிருக்கிறபடி என்பேரில் வேறொரு அங்கனை காதல் கொள்ளாள். அது அபூர்வம்.

மிரு. நீங்கள் அப்படி நினைப்பது பிசகு.

ஜய. எது பிசகு?

மிரு. ஆடவர்களைக் காட்டிலும் பெண்மணிகள் அதிகமாகவே காதல் கொள்கிறார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாக என் தங்கை ஒருத்தி இருந்தாள். அவள் ஒருவன்மேல் காதல் கொண்டதைப் பார்த்தால் நமக்கே ஆச்சரியமா யிருக்கும். நானும் ஒரு பெண்பாலாகப் பிறந்திருப்பேனையின் நான் உங்கள்பேரில் அதிகக் காதல்கொண்டிருப்பேன்.

ஜய. உன் சகோதரி எவ்விதம் காதல் கொண்டாள்? அதைத் தெரிவி பார்ப்போம்.

மிரு. அவள் தன்மனதில் உள்ளதை ஒருவரிடமும் அறிவிக்கமாட்டாள். ஆனாலும் புட்பத்துக்குள் புழுவைப் போல் அவள் மனது காதலனை நினைந்து நினைந்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கும். அவள் மெல்லிய உடல் நாளுக்கு நாள் மெலிந்துகொண்டே இருந்தது. இது அத்தியந்தமோகமல்லவா? புருடர்களாகிய நாம் தான் சமயம் வரும்போது பெண்களுக்காக எல்லாவற்றையும் செய்துவிடுவதாகச் சபதம் செய்வது. பிறகு

அவைகளைச் சொல்லியபடி செய்வதே கிடையாது. பெண்கள் இம்மாதிரி இருக்கவே மாட்டார்கள்.

ஜய. உன் சகோதரி மோகத்திலேயே இறந்து விட்டாளா ?

மிரு. ஆம்; அவள் போனபிறகு என் தந்தைக்கு நான்தான் பிள்ளையும் பெண்ணும்; அதிருக்கட்டும். நான் சந்திரவதனியிடம் போகவேண்டியதுதானே ?

ஜய. ஆமாம் அதை மறந்துவிட்டேன். அவளிடம்போய் இந்தகையைக் கொடுத்து என்காதலை வெளியிட்டுவா. சீக்கிரம் போ. (போகிறார்கள்.)

ஐந்தாம் காட்சி.

சந்திரவதனியின் உத்தியானவனத்தில் சோமநாதன், பூபேந்திரன், பாபு இவர்கள் பிரவேசிக்கிறார்கள்.

சோ. பாபு ! பாபு ! வா ! வா !

பாபு. இதோ வந்துவிட்டேன். இப்பொழுது நாம் செய்யப் போகிற வேடிக்கையைப் பார்க்க யார்தான் வரமாட்டார்கள் ?

சோ. அந்த முழுத்தடியனை மகிபாலனை அவமானப்படுத்துவதில் உனக்குச் சந்தோஷந்தானே ?

பாபு. அந்தமாதிரி அவமானப் படுத்துகிறவனுக்கு வெகுமானமும் கொடுப்பேன். எனக்கும் சந்திரவதனிக்கும் ஆகவிடாமல் செய்தது அந்தக்கழுதையேதான்.

சோ. இதோபார் ! ஐந்து நிமிஷத்தில் செய்துவிடுகிறேன். பூபேந்திரா ! உனக்கும் சம்மதந்தானே?

பூ. நாம் அப்படிச் செய்யாவிட்டால் நாம் பிழைத்திருப்பதற்குப் பயன் என்ன ?

சோ. இதோ இதோ ! நீலலோசனி வந்துவிட்டாள்.

நீலலோசனி பிரவேசிக்கிறாள்.

என்ன ! தந்திரபுத்தி ! வா !

நீல. நீங்கள் மூன்றுபேரும் அந்தக் கொப்பா மரத்தடியில் ஒளித்துக் கொள்ளுங்கள். மகிபாலன் இவ்வழியாக வந்துகொண்டிருக்கிறான். அவன் வரும்போது ஒரு வரும் பேசாமலிருங்கள். (ஒளிந்துக் கொள்கிறார்கள்)— (தனக்குள்) இந்தக்கடிதத்தை இங்கு போட்டு விடுகிறேன். (கடிதத்தைப் போடுகிறாள்.) மீனைத் தூண்டிலுள்ளா லல்லவோ பிடிக்க வேண்டும் ? (போகிறாள்.)

மகிபாலன் தனக்குள் பேசிக்கொண்டே பிரவேசிக்கிறான்.

மகி. இவ்வுலகத்தில் மாந்தர்கள் பெருந்தன்மையை அடைவது அதிர்ஷ்டமே. அதிர்ஷ்டமே எல்லாவற்றிற்கும் காரணம். நீலலோசனிக்கென்பேரில் கொஞ்சம் பிரியம் இருக்கிறப்போலத் தோன்றுகிறது. அவள் என்னிடத்தில் "என் கணவன் உன்னைப்போல்தான் இருக்கவேண்டும் !" என்று சொல்லி இருக்கிறாள். என் அதிர்ஷ்டம் எவ்விதமிருக்குமோ பார்ப்போம் !

சோ. (அவர்கள் மூன்றுபேரும் பேசிக்கொள்கிறார்கள்.) நீலலோசனி உன்னைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறாளா ? ஆமாம் ! ஆமாம் ! !

பாபு. பேசாமலிரு, பேசாமலிரு. இப்பொழுதுதான் பிரம்ம சாரிதலையில் எள் விழுந்திருக்கிறது.

பூ. அவனைப்போய் ஒரு அரை வைக்கட்டுமா?

சோ. பேசாதே, பேசாதே.

மகி. நீலலோசனி இருக்கட்டும். சந்திரவதனியையே கல் கல்யாணம் செய்துகொண்டுவிட்டாள்.

சோ. அடே தடியா! சந்திரவதனியா உனக்கு மனைவி ஆகப் போகிறாள்?

பூ. ஒரு குத்து வையடா அவனை. எனக்குப் போட்டி போடுகிறான்.

சோ. சத்து, சத்து.

மகி. அதற்குத் திருஷ்டாந்தமிருக்கிறது. பத்மாவதி தன் வேலையாளாகிய சித்திரசேனனை மணம் கொள்ளவில் லையா? அப்படியே எனக்கும் ஆகலாம்.

பூ. அப்படியே ஆகும், பயப்படவேண்டாம்.

பாபு. பேசாதே இப்பொழுதுதான் பிரம்மசாரி தலையில் விழுந்த எள்ளை அவன் கண்டுபிடித்திருக்கிறான்.

மகி. கலியாணமாப்சந்திரவதனியோடு உட்கார்ந்துகொண் டிருக்கும் நான் எவ்வளவு ஆனந்தமா யிருப்பேன்.

சோ. அப்போது நான் ஒரு குத்து விட்டால் சந்தோஷ மெல்லாம் அழுகையாய் விடாதா?

மகி. என் ஆட்களையெல்லாம் அப்பொழுது அதிகாரம் பண்ணுவேன்.

சோ. என்ன ! அதிகாரமா ! எல்லாம் மொளகாய்க் காரந் தான் கடைசியில்.

பாபு. பேசாதே பேசாதே.

மகி. அப்பொழுது மிகவும் கம்பீரத்துடன் எனக்கும் உறவினுய் விடுகின்ற சோமநாதனை நான் அழைத்துவாச் சொல்வேன். அப்போதுநாலைந்து ஆட்கள் ஓடுவார்கள். சோமநாதன் வந்த உடனே எனக்கு வந்தனம் செய்து தூரநிற்பான்.

சோ. நான் உனக்கு வந்தனம் கூட செய்யப்போகிறேனே ! உன்னைத் தொலைத்துவிடுகிறேன்.

பாபு. சரி, இப்படிப் பேசினுயானல் மகிபாலன் தெரிந்து கொண்டு விடுவான்.

மகி. சோமநாதனைப் பார்த்து நான் அதிக கம்பீரத்துடன் இம்மாதிரி பேசுவேன். அதுயாதெனில்,—

சோ. அப்போது நான் உன் முதுகில் ஒரு குத்து வைக்க மாட்டேனு ?

மகி. நான் உன் உறவினளாகிய சந்திரவதனியை மணம் புரிந்ததினுல் உன்னையுங்கூட கட்டளை யிடும்படியான அதிகாரம் எனக்கு வந்துவிட்டது,—

சோ. என்ன ! என்ன !!

மகி. நீ இனிமேல் குடிப்பதை விட்டுவிடவேண்டும்.

சோ. உதையடா அவனை !

பாபு. நீ பேசாம லிருந்தாற்றுன் காரியம் முடியும்.

மகி. மேலும் உன் ஆஸ்திணை எல்லாம் ஒரு மூடனோடு சேர்ந்துகொண்டு தொலைத்துவிடுகிறாய். அது யாரெனில்,—

பூ. அது நான்தான். நீ கூட என்னை மூடனென்று சொல்ல வேண்டுமா?

மகி. பூபேந்திரன்தான்.

பூ. சற்று நேரத்துக்குள் யார் மூடனென்று பார்.

மகி. (கடிதத்தைப் பார்த்து) இதென்ன! இங்கொரு கடிதம் கிடக்கிறதே (எடுத்துப் படிக்கிறான்.)

பாபு. இனிமேல்தான் நம் காரியம் ஜயமாகப்போகிறது.

சோ. சிறிதும் பேசாதே.

மகி. அடே! இது சந்திரவதனியின் கடிதம்போலிருக்கிறதே. அவள் இம்மாதிரிதான் எழுதுவாள். அவள் 'அ' இப்படித்தான் எழுதுவாள். சரிதான், சந்தேகமில்லாமல் அவள் கடிதந்தான் இது. எங்கே வாசிப்போம்.

பூ. அவள் 'இ' கூட அம்மாதிரிதான் போடுவது வழக்கம்.

மகி. (வாசிக்கிறான்) 'என் அருமைக் காதலனுக்கு' சரி, சந்திரவதனியின் நடைதானிது. அடே! அவள் கையெழுத்துமிருக்கிறதே! இதுயாருக்கிருக்கும்.

பாபு. நீலலோசனி சாதுரியமே சாதுரியம்.

மகி. (வாசிக்கிறான்) "நான் உன்பேரில் காதல்கொண்டிருப்பது கடவுளுக்குத்தான் தெரியும். வேறொருவருக்கும் தெரியாது. இதை ஒருவரிடமும் தெரிவிக்க வேண்

டாம்! என்ன! ஒருவரிடமும் சொல்லவேண்டாமா? இதை யாருக்குச் சொல்லுகிறாள்? மகிபாலா, உனக்காக விருந்தால், 'எப்படி இருக்கும்?

சோ. எப்படி இருக்குமா? தூக்கில் போடுகிறப் போலத்தான் இருக்கும்.

மகி. (வாசிக்கிறான்) 'நீ என்னை மணம்புரிய வேண்டும். நான் காதல் கொண்டிருப்பவன் ம—ப—ன்தான்! என்ன! நான் காதல்கொண்டிருப்பவன் ம—ப—ன். இதைச்சற்றுக் கவனித்துப் பார்க்கிறேன்.

பாபு. இவனுக்கு நீலலோசனிதான் சரி பேஷ்! நல்ல புதிர்.

மகி. நீ என்னை மணம்புரிய வேண்டும்! சந்திரவதனி! என்னைத்தவிர உன்னையார் மணம்புரியப் போகிறார்கள்? நான்தான். ம—ப—ன் என்றால் அர்த்தம் ஆகவில்லையே. அதுமாத்திரம் என்பெயராய் இருக்குமானால்—— சற்று யோசிக்கிறேன்.

சோ. எப்படியாவது கஷ்டப்பட்டுக் கண்டுபிடி.

பாபு. ஆமாம் அவன்கண்டு பிடித்தான்.

மகி. 'ம' மகிபாலன் என் 'ம' தான் என்பேரின் முதலெழுத்து பேஷ்.

சோ. அதோ பார்த்தாயா அவன்கண்டு பிடிப்பான் என்று சொன்னேனே.

மகி. சரி 'ம' தெரிந்து விட்டது. மற்றது தெரியவில்லையே 'ம'வுக்கு அப்புறம் 'கி' என்றல்லவா வரவேண்டும் 'ப' எழுதி இருக்கிறதே.

பாபு. ஆமாம் அதற்கென்ன செய்கிறது.

சோ. நான் அவனை அடிக்கிற அடியில் அவன் அப்பா என்னு கத்தவேண்டாமா!

மகி. கடைசியில் 'ன்' எழுதி இருக்கிறது. சரிதான் இவ் வெழுத்தெல்லாம்என்போரின்எழுத்தாகத் தானிருக்க வேண்டும். என்னமோ இன்னும் எழுதி இருக்கிறதே! (படிக்கிறான்)

"இக்கடிதம் உன்கையிலேயே அகப்பட்டு விட்டால் ஒருவருக்கும் வெளிப்படுத்த வேண்டாம். நீ என்னை மணம் புரிந்தால் உனக்கு மகிமை ஏற்பட்டு விடுகிறது. உலகத்தில் மகிமையை அடைவது மூன்றுவிதம். சிலர் பிரபுக்களாகவே பிறக்கிறார்கள். சிலர் கௌரவத்தைத் தாங்களேசம்பாதித்துக்கொள்கிறார்கள். இன்னும்சில ருக்குத் தாங்களேகிடைக்கிறது. உனக்குப் பெருமை தாங்களே கிடைக்கப் போகிறது. உன் காலில் நீ கட்டியிருக்கும் மஞ்சள் நிறமானபட்டையை நான் பார்க்கும்போதெல்லாம், எனக்கு உன்பேரில் காதல் அதிகரிக்கிறது. ஆகவே நீ என்னைச் சீக்கிரம் வந்து மணம் புரிய வேண்டும்.

இப்படிக்கு,

உன் காதலி

பேஷ்! இக்கடிதம் எனக்குத்தான் சந்தேகமில்லை. என் அதிர்ஷ்டத்தை நான் என்னென்று சொல்வேன். உடனேபோய் என் கால்பட்டையைக் கட்டிக்கொண்டு சந்திரவதனியிடம் செல்கிறேன். (போகிறான்.)

பாபு. சோமநாதன், பூபேந்திரன் இவர்கள் வெளியே வருகிறார்கள்

பாபு. சீக்கிரம் போ. உன்னை உன் காதலி எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

சோ. அவன் காதைப் பார்த்து ஒரு அடிகொடுத்து அனுப் புங்கடா.

பாபு. இதோ இதோ நீலலோசனி வந்து விட்டாள்.

நீலலோசனி பிரவேசிக்கிறாள்.

சோ. உன் தந்திரத்தை எனக்குக் கொஞ்சம் கற்றுக்கொ டேன்.

பூ. என்னை மறக்கவேண்டாம். எனக்குக் கூட.

நீல. நம் தந்திரம் மகிபாலனிடம் நன்றாய்ப் பலித்துவிட் டதா? சொல்லுங்கள்.

சோ. சொல்லவேண்டுமா? நன்றாய்ப் பலித்து விட்டது.

நீல. முழுமையும் பார்க்க வேண்டுமானால் சந்திரவதனி யிடம் அவன் வரும்போது நீங்கள் பாருங்கள். அவன் மஞ்சள் பட்டையைக் கட்டிக்கொண்டு வரப்போகி றான். அதைச் சந்திரவதனி கண்டபோதே அவ ளுக்குக் கோபம் வந்துவிடப் போகிறது. மகிபாலன் தன்காதலை வெளியிட்டுக் கொண்டே வரப்போகிறான். அந்தக்கூத்தையும்பாருங்கள், வாருங்கள் போவோம்.

சோ. இதோ வந்து விட்டேன்.

பூ. என்னை விட்டு விட்டு இதோ நானும் வருகிறேன்.
(போகிறார்கள்).

முதலாவதங்கம் முற்றிற்று.

மூன்றும் அங்கம்.

முதல் காட்சி.

சந்திரவதனியின் உத்தியானவனத்தில் மிருக திருஷ்ணிகையும் ஒரு தம்பூரோடு சாபுவும் பிரவேசிக்கிறார்கள்.

மிரு. நண்ப! நீ எங்கே வசிக்கிறாய்.

சாபு. காத்தவராயன் தெருக்கோவிலில்.

மிரு. ஓகோ! நீ அப்படியானால் கோவில் பூஜை செய்பவனோ?

சாபு. இல்லை. இல்லை. என் வீடு கோவிலுக் கருகாமையி லிருக்கிறது. நானே என் வீட்டில் இருக்கிறேன். ஆகையினால் தான் கோவிலில் வசிக்கிறேன் என்று சொன்னேன்.

மிரு. உன் நியாயம் மிகவும் நன்றாயிருக்கிறது. ஒரு அரசன் ஒரு பிச்சைக்காரனருகில் இருந்தால் அவனையே பிச்சைக்காரனென்று சொல்லி விடுவாய் போலும்!

சாபு. ஐயா! வார்த்தைகளுக்கு அனேகம் அர்த்தங்கள் இருக்கின்றன.. எவ்விதம் வேண்டுமானாலும் அவ்விதம் திருப்பிக் கொள்ளலாமோ இல்லையோ?

மிரு. பேஷ்! நீ நல்ல வேடிக்கை செய்கிறாய். சந்திரவதனியிடம் இருக்கும் விகட கவியா நீ.

சாபு. ஆமாம் ஐயா! நான் விகட கவிதான்.

மிரு. ஜயசிங்கனிடத்தில் உன்னைப் பார்த்தாற்போல் எனக்கு ஞாபகம் இருக்கிறதே?

சாபு. இருக்கலாம். விகடம் செய்வதற்காக நான் அங்கு அனேக தடவை வந்திருக்கிறேன். உங்கள் எஜமான் என் எஜமானியிடம் அடிக்கடி வருகிறதுபோல் நானும் உங்கள் எஜமானனிடம் அடிக்கடி வருவேன். ஐயா! எனக்கு நேரம் ஆகிறது. நான் போய் வருகிறேன்.

(போகிறான்).

மிரு. (தனக்குள்) இவன் விகடம் செய்வதில் அதிக சமர்த்தன் போலத் தோன்றுகிறது. அதுவும் ஒரு வித்தைதான். வேத சாஸ்திரங்களைப் படிப்பதில் எவ்வளவு கஷ்டம் மிருக்கிறதோ அவ்வளவு கஷ்டம் இதிலும் இருக்கிறது. இதற்கு மிகவும் சாமர்த்தியம் வேண்டும்.

சோமநாதனும் பூபேந்திரனும் பிரவேசிக்கிறார்கள்.

சோ. ஐயா! தாங்கள் சுகமா?

மிரு. ஆம்; நீங்கள் சுகந்தானே?

சோ. தாங்கள் தயவுசெய்து கொஞ்சம் எங்கள் வீட்டிற்கு வருகிறீர்களா? சந்திரவதனி தங்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னாள்.

மிரு. என்னையா பார்க்கவேண்டுமென்று சொன்னாள்? ஆனால் இதோ போகலாம். அவளுக்காகத் தான் நான் இவ்வளவு கஷ்டப்படுகின்றது.

சோ. போவோம் வாருங்கள்.

சந்திரவதனியும் நீலலோசனியும் பிரவேசிக்கிறார்கள்.

மிரு. மாதரசே! உங்களைப் பார்த்து இன்றையதினம் கிருதார்த்தனானேன்.

பூ. அப்ப! கிருதார்த்தனுய் விட்டாய். (தனக்குள்)

மிரு. அம்ம! நான் சொல்வதைத் தாங்கள் மாத்திரந்தான் கேட்கவேண்டும். தாங்கள் தயவு செய்து அதற்குத் தாவு அளித்தால் மிகவும் நலமாயிருக்கும்.

பூ. அடே! இவன் அசாத்தியமா யிருக்கிறானே!

சந். நீங்கள் எல்லோரும் சற்று விலகி இருங்கள்.

(சோமநாதன், பூபேந்திரன், நீலலோசனி போகிறார்கள்.)

என் அருகில் வந்து உட்காரக்கூடாதா?

மிரு. சமாசாரம் என்ன அம்மா?

சந். தங்கள் திருநாமமென்ன?

மிரு. உங்கள் வேலையாளாகிய எனது பெயர் சாரசன்.

சந். என் வேலையாளா? சீ! கொஞ்சமேனுந் தகாது. தாங்கள் ஜயசிங்கனின் வேலையாள் அல்லவா?

மிரு. ஆமாம்! ஜயசிங்கன் உங்கள் வேலையாள். நான் ஜயசிங்கனுடைய ஆள். ஆகவே நானும் தங்கள் வேலையாள் தானே.

சந். இனிமேல் அவனைப் பற்றித் தாங்கள் என்னிடம் பேச வேண்டாம்.

மிரு. அம்மணி! அவரைப்பற்றிப் பேசுவதற்காகத் தான் நான் இப்போது உங்களிடம் வந்திருக்கிறேன்.

சந். ஐயா! தங்களுக்கு நான் முன்னமே அவனைப்பற்றி என்னிடம் பேசவேண்டாம் என்று சொல்லி இருக்கிறனே. அதைவிட்டு வேறு ஏதாவது சொல்வதா யிருந்தால் மிகவும் நன்றுயிருக்கும்.

மிரு. வேறு சமாசாரம் என்ன இருக்கிறது ?

சந். நான் ஒருவிஷயம் சொல்கிறேன். அதைத்தயவுசெய்து கேட்கவேண்டும். தாங்கள் முன், இங்கு வந்திருந்து திரும்பிப் போனபோது, நான் தங்களுக்கு ஒரு மோதிரம் கொடுத்தனுப்பி வித்தேன் அல்லவா ? அது உண்மையில் தங்களுடைய மோதிரமாக இல்லையானாலும் நான் பொய்யாக அது தங்களுடைய மோதிரம் என்று கொடுத்தனுப்பினதற்கு என்னை மன்னிக்க வேண்டும். நான் அப்படிக் கொடுத்தனுப்பியதிலேயே என் மனதிலிருப்பது தங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். நான் தங்கள்மேல் முனைப் பூர்வமாகக் காதல் கொண்டிருக்கிறேன். ஆகவே என் கோரிக்கையைத் தாங்கள் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும்.

மிரு. சந்திரவதனி ! உங்களைப் பார்த்தால் எனக்கு மிகவும் பரிதாபமா யிருக்கிறது.

சந். என்பேரில் பரிதாபப்படுவது தங்களுடைய காதலைக் கொஞ்சம் வெளிப்படுத்துகின்ற தல்லவா ?

மிரு. அப்படி அர்த்தம் கொள்ளவேண்டாம். பரிதாபப் படுவதைக் காதலைக்காட்டுவதென்று கூறுவது மிகவும் பிசகு. ஏனெனில், நாம் நம்முடைய சத்துருக்களையும் பார்த்துப் பரிதாபப்படலாம். அதைக் காதல் என்று சொல்லி விடலாமா ?

சந். ஆனால் நான் தங்களுக்கு விரோதி அல்லவே. ஆகையால் தாங்கள் என்மேல் காதல்கொள்ளலாம். (மணி அடிக்கிறது) ஓகோ ! மணி ஆய்விட்டது. நான் தங்களோத்தான் மணம்புரிவேன். அதற்குத் தாங்கள் தடை

சொல்லக்கூடாது. தாங்கள் சென்று வருகிறீர்களா?

மிரு. ஆஹா! சென்று வருகிறேன்.

சந். இன்னும் ஒரு வார்த்தை மாத்திரம் சாரசரே! சுவாமி பேரில் ஆணையாக நான் தங்கள்பேரில் மோகங்கொண் டிருக்கிறேன். நான் அப்படிக்கொண்டிருப்பது நியா யமோ, அனியாயமோ தெரியாது. அந்த மோகத் தின் வலிமையால் நானதை அறியமுடியவில்லை. ஆகை யினால் தாங்கள் என் எண்ணத்தைக் கட்டாயம் நிறை வேற்றவேண்டும்.

மிரு. நான் போய் வருகிறேன் அம்மா! என் எஜமான னின் காதலை நான் தெரியப்படுத்த வந்தபோது நீங் கள் என் பேரிலேயே மோகங்கொண்டு விட்டீர்கள். சரி இனிமேல் என் எஜமானனுக்காக நான் இவ்விடம் வருவதே இல்லை.

சந். அப்படித் தாங்கள் கோபங் கொள்ள வேண்டாம். எஜமானனுக்காக இவ்விடம் வராமற் போனாலும் எனக்காகவாவது தாங்கள் வாருங்கள். நான் போய் விட்டு வருகிறேன். (போகிறாள்.)

மிரு. (தனக்குள்) இதென்ன இவள் ஸ்திரீயாகிய என்பேரில் காதல்கொண்டிருக்கிறாளே; நான் பெண் என்று எப்ப டித் தெரியப்படுத்தட்டும்?

(பாடுகிறாள்)

ராகம் - சஹானா.

பல்லவி.

காதலின் வலிமையை - என்னென்றெடுத்துரைப்பேன்
கனிந்தவும் போமோ - ஐயோ! (காத)

அனுபல்லவி.

தீதிது, தீதிது, தீதிது, தீதிதென்
ரோதியும் நெஞ்சகம் - உறுதிகொள்ளவில்லை (காத)

சரணம்.

பெண்ணென என்மேல் - பெண்மோகம் கொள்ளவோ
பேடிவேடமும் - பூண்டேன்
விண்ணென மின்னல்நேர் - மேதினி வாழ்வன்றோ
எண்ணுத திதையென்னே - என்னே என்னேநெஞ்சம் (காத)

இவை எல்லாம் கடவுளின் செயல்தான். நாம் என்ன செய்வோம். இது எம்மாதிரி முடியும்? பார்ப்போம்.

(போகிறாள்.)

இரண்டாம் காட்சி.

சந்திரவதனியின் மாளிகையில் சோமநாதன், பூபேந்திரன், பாபு இவர்கள் பிரவேசிக்கிறார்கள்.

பூ. சோமநாதா! நான் இனிமேல் ஒரு நிமிஷங்கூட இங்கிருக்கமாட்டேன்.

சோ. என் காரணமென்ன?

பாபு. ஒரு நிமிஷங்கூட இருக்கமுடியாமல் என்ன வந்துவிட்டது.

பூ. சந்திரவதனி என்னை விட்டு விட்டு ஜயசிங்கனின் ஆளாகிய சாரசன்மேல் முழுமோகம் கொண்டு விட்டாள். நான் இங்கிருந்து என்ன செய்வது? நான் அங்கு நின்று கொண்டிருக்கும்போதே அவனோடு அவள் பேசினாள்.

சோ. உன்னை அவள் பார்த்தாளா?

பூ. நன்றாய்ப் பார்த்தாள்.

சோ. சரி எப்போது உன்னை அவள் நன்றாய்ப் பார்த்தாளோ அப்பொழுது உன்மேல் தான் அவள் காதல் கொண்டிருக்கிறாள். இது தெரியாதா உனக்கு?

பூ. என்னை என்ன பயித்தியமாக்குகிறாயோ?

பாபு. சீ! அவள் உன்னைத்தான் மணம்புரியப் போகிறாள். உன் எதிரில் சாரசனிடம் அவள் பேசியது எதற்காகத் தெரியுமா? நீ அவள்பேரில் வைத்திருக்கும் மோகத்தைக்கிளப்பி விடுவதற்குத்தான். நீ அப்போது அவளிடம் பேசி இருக்கவேண்டும். உன்பேரில் தப்பு; பின்னும், உனக்குக் கோபம் வருகிறதோ என்று பார்ப்பதற்குத் தான் அவள் சாரசனை பேசியது. இப்போது தான் என்ன; நீ சாரசனை சண்டை பிடித்து அவனைத் தொலைத்து விடு. உடனே சந்திரவதனிக்கு உன்பேரில் சந்தோஷம் வந்து விடுகிறது.

பூ. பேஷ் பாபு! நன்றாய்ச் சொன்னாய் என் சாமர்த்தியத்தை இதோ காட்டுகிறேன் பார்.

சோ. பூபேந்திரா! அப்படியே செய். நான் போய் சாரசனைச் சண்டைக்கிழுத்துக் கொண்டு வரட்டுமா? அவனைக் குத்துகிற குத்தில் அவன் உட்கார்ந்து போய் விட வேண்டாமா? பிறகு நீதான் சந்திரவதனியின் கணவனாவாய்.

பாபு. இதுதான் நல்லகாரியம் பூபேந்திரா!

பூ. சரி நீங்கள் இருவரில் யாராவதுபோய் அவனைச் சண்டைக்கிழுத்து வாருங்கள்.

சோ. இதோ நான் போகிறேன். அவனுக்கொரு கடிதம் எழுதிக் கொண்டு வா சீக்கிரம் போ.

பூ. உன்னை மறுபடியும் எங்கே காண்பது ?

சோ. காத்தான் வீதியில் 27-வது நெ. வீட்டிலிருப்பேன் அங்கு வந்து சேர். (பூபேந்திரன் போகிறான்.)

பாபு. சோமநாதா ! பூபேந்திரன் உன்னிடத்தில் நன்றியகப் பட்டுக் கொண்டான்.

சோ. அவன் என்னுடைய அருமைச் சினேகிதன் உனக்குத் தெரியாது.

பாபு. கடிதத்தைக் கொண்டுபோய் கொடுக்கப் போகின்றாயா ? என்ன ?

சோ. பாபு! நமக்கென்னசண்டையைமூட்டிவிட்டுவேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கலாமே; அவர்கள் மண்டையை உடைத்துக் கொள்ளட்டும்.

பாபு. ஆனாலும் பூபேந்திரன் மண்டைதான் உடையும்.

நீலலோசனி பிரவேசிக்கிறாள்.

சோ. இதோ இதோ நீலலோசனி வந்துவிட்டாள்.

நீல. நீங்கள் வேடிக்கை பார்த்துச் சிரிக்கவேண்டுமென்றிருந்தால் உடனே புறப்படுங்கள். மகிபாலன் காலில் மஞ்சள் பட்டையைக் கட்டிக்கொண்டு சந்திரவதனியிடம் வரப்போகிறான்; சீக்கிரம் வாருங்கள்.

சோ. நம் தந்திரம் நன்றாய்ப் பலித்துவிட்டது.

நீல. அதற்குத் தடை என்ன. மகிபாலன் கடிதத்தில் எழுதி இருந்தவைகளை எல்லாம் உண்மை என்றெண்ணித் தன் காதலை சந்திரவதனியிடம் தெரிவிக்கப் போகிறான். அப்போது சந்திரவதனிக்கு அளவற்ற

கோபம் வரப்போகிறது. இன்னும் நடக்கப் போகி றதைப் பார்ப்போம் வாருங்கள்.

சோ. இதோ போகலாம் வா. (போகிறார்கள்

மூன்றாம் காட்சி.

நகரத்தின் ஓர் தெருவில் சாந்தசீலனும், அஜிட்சிங்கும் பிரவேசிக்கிறார்கள்.

சாந். அஜிட்சிங்!
நீ எனக்காக உன் கஷ்டத்தைக் கூட பாராமல் மிகவும் சிரமமெடுத்துக் கொள்வதற்காக நான் உனக்கு மறு வுபகாரம் யாது செய்யப்போகிறேன்?

அஜி. எனக்குத் தொந்தரவு ஒன்றுமில்லை. உன்னைக்கண்டு உனக்குத் தீங்கு ஒன்றும் நேரிடாதபடி காக்கத்தான் நான் இங்கு வந்தேன். உனக்குபகாரம் புரிவது மாத்திர மில்லாவிட்டால் நான் இங்கு வருவதற்குக் காரணமே கிடையாது. உனக்கும் எனக்கும் உள்ள சிநேகம் தான் என்னை இங்கு வரச்செய்தது.

சாந். மிகவும் கருணையுள்ள அஜிட்சிங்! நான் உனக்கு எத்தனை வந்தனங்கள் செய்தாலும் போதாதா. நாமி ருவரும் போய் இவ்வூரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரு வோமா?

அஜி. ஊரைச் சுற்றிப் பார்ப்பது நாளைக்காகட்டும் முதலில் உனக்கொரு இருப்பிடம் தேடிக்கொண்டாயா?

சாந். இருப்பிடத்திற்கென்ன? எதாவதொன்று அகப்படு கிறது. இந்நகரத்தை ஜனங்கள் மிகவும் புகழ்ந்து பேசுகிறார்களே! இதைப்போய் சுற்றிப் பார்த்து

விட்டு வருவோம் வா! இவ்வூரில் மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் எல்லாம் இருக்கின்றனவாமே.

அஜி. நான் இப்பொழுது இங்கு வந்திருப்பதே மிகவும் அபாயகரமானது. எனக்கும் ஜயசிங்கனுக்கும் முன் னொரு தடவை சண்டை நேரிட்டது. அதனால் அவன் மிகவும் கோபங்கொண்டிருக்கிறான். நான் இங்கு வந்திருப்பது அவனுக்குத் தெரியுமாயின் என்னை உடனே சிறையாக்கி விடுவான். ஆகையால் நான் உன்னோடு எப்படி வாட்டும்?

சாந். அது என்ன சண்டை? எனக்குச் சொல்லக் கூடுமா அதை?

அஜி. விபரீதமாக ஒன்றுமில்லை. நான் முன் கப்பல் வியா பாரம் செய்து கொண்டிருந்தபோது என் கப்பலில் சிலவற்றை அரசன் பிடித்துக் கொண்டு விட்டான். அதைப்பற்றித் தான் எனக்கும் அவனுக்கும் சண்டை நேரிட்டது.

சாந். அப்படியானால் ஒருவருக்கும் தெரியாமல் என் பின் னேவா.

அஜி. அப்படிச் செய்வது அசாத்தியம்! இதோ என் பணப்பை யிருக்கிறது. நீ வேண்டுமானால் எடுத் துச் செலவு செய்யலாம். காதர் சாயபு தெருவில் ஒரு ஓட்டலிருக்கிறது. அங்கு உணவு மிகவும் நன்று யிருக்கும். நான் அங்கு சென்று உனக்குச் சாப்பாடு தயார்படுத்தச் சொல்கிறேன். நீ இஷ்டப்பிரகாரம் போய் ஊர்முழுதும் பார்த்து விட்டு வா. பிறகு அந்த ஓட்டலுக்கு வந்தால் என்னைக் காணலாம்.

சாங். உன் பணப்பை என்னிடம் என்னத்திற்கு ?

அஜி. உன் கையிலோ பணம் கிடையாது. ஊரில் ஏதாவது அதிசயமான சாமான்கள் விற்கும் அதை வாங்க வேண்டுமென்று நீ ஆசைகொள்ளலாம். அதற்காகத் தான் பணப்பை.

சாங். சரி இன்னும் ஒரு மணிக்குள் நான் உன்னை மறுபடியும் வந்து பார்க்கிறேன்.

அஜி. இடம் தெரியுமோ இல்லையோ ? ஓட்டல்.
சாங். தெரியும். ஞாபகமிருக்கிறது. (போகிறார்கள்.)

நான்காம் காட்சி.

சந்திரவதனியின் தோட்டத்தில் சந்திரவதனியும் நீலலோசனியும் பிரவேசிக்கிறார்கள்.

சந். இன்னும் அவர் வரவில்லையே. அவரைப் பார்க்காவிடில் எனக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகக் காண்கிறதே. சீக்கிரம் வருகிறேன் என்று சொல்லி அனுப்பித்தார். அதிக நாழிகையாய் விட்டதே. இன்னும் அவரைக் காணேனே. ஐயோ ! நான் யாது செய்வேன். மறுபடியும் மகிபாலனை அவரிடம் அனுப்புகிறேன். எங்கே மகிபாலன் ?

நீல. அம்மா ! அவனுக்குப் புத்தி கொஞ்சம் தடமாட்டமாயிருக்கிறது. பயித்தியம் பிடித்து விட்டாற்போல இருக்கிறது.

சந். என்ன ! அவனுக்குப் பயித்தியமா ? என்ன சமாசாரம் ?

நீல. ஆமாம்! அவன் எப்பொழுதும் சிரித்துக்கொண்டே யிருக்கிறான். அவன் உங்களிடத்தில் வரும்போது நீங்கள் மிகவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அவனுக்குப் பைத்தியம் தான் பிடித்து விட்டது.

சந். அவனை இங்கு கூப்பிடு பார்ப்போம்.

(நீலலோசனி போய் மகிபாலனை அழைத்து வருகிறாள்.)

மகிபாலன் பிரவேசிக்கிறான்.

சந். என்ன மகிபாலா! என்ன சமாசாரம்?

மகி. (சிரித்துக் கொண்டே) கனியினும் இனிய மொழி யாளே!

சந். நீ என் இப்படிச் சிரிக்கிறாய். நான் இப்போது விசன மாயிருக்கிறேன் என்று உனக்குத் தெரியவில்லையா?

மகி. விசனமா? எனக்கு விசனமேது? நான் காலில் மஞ்சள் பட்டை கட்டிக்கொண்டிருப்பது என் காத லிக்கு மிகவும் சந்தோஷமாயிருந்தால் எனக்கு விசன மேது?

சந். என்ன மகிபாலா! உனக்கு மூளை சரியாயில்லையோ?

மகி. மூளையில் ஒன்றும் பிசகு இல்லை. என் சண்மணியின் கடிதம் சரியாகக் கிடைத்தது. பார்க்க மிகவும் சந் தோஷமாயிருக்கிறது.

சந். சரி; இவனுக்குப் பயித்தியம் தான். இவனை இன்று முழுதும் தூங்கச் செய்தால் இம்மயக்கம் தெளியும். (வெளிப்படையாய்) மகிபாலா! நீ தூங்கச் செல்கி றாயா?

மகி. ஆகா செல்வோம் வா.

சந். பேஷ்! என்னையா கூப்பிடுகிறாய்?

மகி. ஆம்! கடிதத்தில் அம்மாதிரி தானே எழுதி இருக்கிறது. 'சிலர் கனவான்களாகவே பிறக்கிறார்கள். சிலர் கண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் பிறரால் கனவான்களாக ஆக்கப்படுகின்றார்கள்'

சந். சரி! இது முழுப்பைத்தியம் தான்.

சேவகன் பிரவேசிக்கிறன்.

சேவ. அம்மணி! ஜயசிங்கனிடமிருந்து அந்தக் கனவான் வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறார்.

சந். இதோ வருகிறேன் என்று சொல்.

(சேவகன் போகிறான்.)

நீல்லோசனி! இந்தப் பைத்தியத்தைப் பார்த்துக் கொள் எங்கே சோமதாதன்? யாராவது இவனை வெளிப்படுத்திவிடாமல் பார்த்துக் கொண்டிருங்கள். நான் சென்றுவருகிறேன்.

(நீலலோசனியும் சந்திரவதனியும் போகிறார்கள்)

மகி. (தனக்குள்) ஓகோ! இப்பொழுது சந்திரவதனி சோமதாதனை அழைத்துவரச்சொன்னதற்குக் காரணம் தெரிந்தது. அவனிடத்தில் எனக்குப் புதிதாய் ஏற்பட்டிருக்கும் கண்ணியத்தைக் காட்டச்சொல்லித் தான். கடிதத்திலும் அப்படித்தானே எழுதி இருக்

கிறது. சந்திரவதனியை சந்தோஷப் படுத்திவிட் டேன். இன்னும் கொஞ்ச நாளைக்கெல்லாம் என்னைக் கலியாணமும் செய்து கொண்டு விடுவாள். எதுவும் கடவுளின் செயல்.

'என் செயலாவதியா தொன்று மில்லை யினித் தெய்வமே
யுன்செயலே யென்று ணரப்பெற்றே னிந்த வூனெடுத்த
பின் செய்ததீவினை யேதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன் செய்ததீவினையோ விங்ஙனேவந்து முண்டதுவே'

நீலலோசனி சோமநாத்தனையும் பாபுவையும் அழைத்துக் கொண்டு பிரவேசிக்கிறாள்.

சோ. நீலலோசனி! அவனை முழுப்பயித்தியம் செய்து விட்டாயோ இல்லையோ. எங்கே அவன்?

பாபு. இதோ இருக்கிறான். என்ன மகிபாலா. என்ன? ஏதோ ஒரு மாதிரியாய் இருக்கிறாயே?

மகி. சீ! தூரப்போ. தொந்தரவு செய்யாதே போ. நான் இப்போது ஒரு பெரும் யோசனையிலிருக்கிறேன்.

நில. ஆமாம் யோசனைதானினிமல், சோமநாதா! சந்திர வதனி என்ன சொன்னாள் தெரியுமா?

இவனைப்பார்த்துக் கொள்ளச்சொன்னான்.

சோ. சீ பாவம்! அவனைத் தொந்தரவு செய்யவேண்டாம். மகிபாலா! உனக்கென்ன உடம்பு. பயித்தியம் பிடித் திருக்கிறதா?

மகி. அடே! யோசித்துப் பேசு.

நீல. அப்பா! பயித்தியம் என்றால் என்னகோபம் வருகின் றது.

சோ. சரி; அவனை இழுத்துக்கொண்டு போய் ஒரு இருட் டறையில் மூடிவிடுவோம். சந்திரவதனியே அவனைப் பயித்தியம் என்று சொல்லிவிட்டாள். இனிமேல் நாம் என்னசெய்தாலும் கேட்பாரில்லை.

கடிதத்தோடு பூபேந்திரன் பிரவேசிக்கிறன்.

பூ. சோமநாதா! இதோ கடிதம் எழுதிக்கொண்டு வந் திருக்கிறேன்.

சோ. எங்கே அதைப்படி பார்ப்போம்.

பூ. அதில் ஒன்றுமில்லை. சண்டைக்குத்தான் அவளை அழைத்திருக்கிறேன். அது போதுமோ இல்லையோ?

சோ. போதும். அதை என்னிடம் கொடு. நீபோய் சண் டைக்குத் தயாராயிரு. நான் அவனை அழைத்து வந்து சேருகிறேன். (பூபேந்திரன் போகிறன்). இவனைப்பிடித்து இழுத்துக் கொண்டுபோகலாம் வா ருங்கடா. (மகிபாலனை இழுத்துச் செல்கிறார்கள்.)

ஐந்தாம் காட்சி.

சந்திரவதனியின் வீட்டில் சந்திரவதனி, மிருகதிருஷ்ணிகை, சோமகாதன், பாபு இவர்கள் பிரவேசிக்கிறார்கள்.

சோ. இதோ சாரசன் இங்குவந்து இருக்கிறன். பேசி முடியட்டும். அப்புறம் சண்டைக் கிழுப்போம்.

பாபு. ஆமாம். அதற்குள் சண்டைக்கிழுப்பதற்கு ஒரு வழி தேடுவோம். (போகிறார்கள்.)

சந்தி. நான் தங்களுக்கு என்ன சொன்னபோதிலும் உங் கள் மனம் உருகாதோ? நான் இப்படி வருந்துவது

உங்களுக்கு நன்று யிருக்கிறதா? உங்களை நினைந்து நினைந்து உருகுகிறேனே!

மிரு. இதேமாதிரிதான் என் எஜமானனும் வருத்தப்படுகிறார்.

சந்தி. அதிருக்கட்டும். என் அடையாளமாக இவ்வாபரணத்தைப் போட்டுக்கொள்ளுங்கள்.

மிரு. உங்கள் அடையாளமாக இதை அரசனுக்குக்கொடுத்து விடட்டுமா?

சந்தி. தங்களுக் கடையாளமாக நான் கொடுத்ததை ஜயசிங்கனுக்குக் கொடுத்துவிடுவது நன்று? தாங்கள் மறுபடியும் நாளையதினம் இங்கு வந்துவிட்டுப் போகவேண்டும். நாளைக்காவது எனக்குத் தாங்கள் ஒரு பதில் சொல்லவேண்டும். (போகிறாள்.)

சோமநாதனும், பாபுவும் பிரவேசிக்கிறார்கள்.

சோ. ஐயா! சாரசரே! கொஞ்சம் நில்லுங்கள்.

மிரு. என்ன! என்ன சமாசாரம்.

சோ. ஒன்றுமில்லை. உங்கள்பேரில் மற்றொருவன் கோபங்கொண்டிருக்கிறான். உங்களோடு சண்டை செய்யவேண்டுமாம். அதற்காக அவன் உங்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்.

மிரு. என்ன! என் பேரில் கோபித்துக்கொள்ளும்படி நான் என்ன தப்பு செய்திருக்கிறேன்? எனக்கு ஒருவரும் விரோதிகள் கிடையாதே.

சோ. அது என்னமோ எனக்குத் தெரியாது. அவன் சண்டைக்காகத் தயாராயிருக்கிறான்.

மிரு. அவன் யார் ? எனக்குச் சொல்வீர்களா ?

சோ. அவன் ஒரு போர்வீரன். அவன்சண்டைசெய்ய ஆரம்பித்தால் அவனை ஒருவராலும் வெல்லமுடியாது. முன்மூன்று பேர்களோடு யுத்தஞ்செய்து அவர்களை வீரசுவர்க்கம் அனுப்பிவிட்டான்.

மிரு. அப்படியா ! நான் அவனைப்போல சண்டைபிடிப்பவனல்லவே. சிலபேர்கள்மற்றவர்களின்பலத்தைஅறிந்துகொள்ளும் பொருட்டு வீண் சண்டைக்கிழுப்பது வழக்கம். இவனும் அப்படித்தானிருக்கவேண்டும்.

சோ. இல்லை. உங்கள் பேரில் கோபத்தினால் தான் அவன் உங்களைச்சண்டைக்குக் கூப்பிடுவது. ஆகவே சீக்கிரம் கத்தியை எடுத்துக்கொண்டு புறப்படுங்கள்.

மிரு. எனக்கு நீங்கள் ஒரு உதவிசெய்யவேண்டும். அவனிடம்போய் நான் அவனுக்கு என்ன தப்பு செய்தேன் என்று கேட்டு எனக்குத் தெரிவிக்கவேண்டும். என் மனதறிந்து நான் ஒருவருக்கும் ஒரு தப்பும் செய்தது கிடையாது.

சோ. அப்படியே செய்கிறேன் பாபு ! நீ இவரிடத்தில் இரு. இதோ வந்துவிடுகிறேன். (போகிறான்)

மிரு. ஏனையா ! இது என்ன சமாசாரம் உங்களுக்கேதாவது இது விஷயத்தில் தெரியுமா ?

பாபு. உங்கள் பேரில் அவன் கோபங்கொண்டிருப்பது மாத்திரம் தெரியும். மற்றது ஒன்றும் தெரியாது.

மிரு. அவன் எப்படிப்பட்டவன் ?

பாபு. அவன் சண்டைக்கு வந்துவிட்டால் சாவுதான்: அவன் அப்படிப்பட்ட போர்வீரன். ஆனல் உங்களுக்கும் அவனுக்கும் எவ்விதத்திலாவது சமாதானம் செய்து விடட்டுமா ?

மிரு. அப்படிச் செய்துவிட்டால் நான் உங்களுக்கு மிகவும் நன்றியறிவுள்ளவளுக ஆய்விடுவேன். என்னைச் சண்டை பிடிக்கத் தெரியாதவன் என்று எண்ணிக்கொண்டாலும் எண்ணிக் கொள்ளட்டும். நீங்கள் எப்படியாவது சமாதானம் செய்து விடுங்கள். எனக்கு அது போதும். (போகிறுள்)

சோமநாதனும், பூபேந்திரனும் பிரவேசிக்கிறார்கள்.

சோ. பூபேந்திரா ! சாரசனிடம் போயிருந்தேன். அவனை ன்ன மிகவும் கர்வத்தோடிருக்கிறுனே ? அவனேடு சண்டை பிடித்து உதைத்தால்தான் அவனுக்குக் கொழுப்படங்கும்.

பூ. இதோ பார். இப்போது ஐந்து நிமிஷத்தில் அடக்கி விடுகிறேன்.

சோ. இங்கேயே இரு. அவனைப்போய் அழைத்து வருகி றேன் (வேறுபுறமாய்) இந்த மூடனைப்போல் இவ்வுல கில் வேறு யாராவது இருப்பார்களா ?

மிருகதிருஷ்ணிகையும், பாபுவும் பிரவேசிக்கிறார்கள்.

என்ன பாபு ! சாரசன் சண்டைக்குத் தயாராயிருக் கிறுனு ?

பாபு. சாரசன் பயந்து விட்டான். சண்டை என்று சொல் லியபோதே அவனுக்குப் பயம் வந்துவிட்டது.

சோ. (மிருகதிருஷ்ணிகையைப்பார்த்து) ஐயா! பயந்து சண்டை செய்யாமலிருக்க முடியாது. அவன் உங்களோடு சண்டை பிடிக்கவேண்டுமென்று சபதம் செய்து விட்டான். ஆனல் உங்களைக் காயப்படுத்துகிற தில்லையாம். ஆகையினல் தாங்கள் சீக்கிரம் தயாரா யிருங்கள்.

மிரு. (ஒருபுறமாக) என்னைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும். நான் சண்டை பிடிக்கவில்லை என்றால் என்னைப் பரிகாசம் செய்வார்கள். சண்டை பிடிக்காமலிருக்கவும் முடியவில்லை. என்ன செய்வது.

பாபு. அவன் மூட்டுத்தனமாய்ச் சண்டை செய்தால் நான் தோல்வி அடைந்துவிட்டேன் என்று சொல்லி விடுங்கள். என்ன செய்வது?

சோ. பூபேந்திரா! பயப்படாதே; தைரியமாயிரு. அவனைச் சரிப்படுத்த இவ்வளவு காலம் சென்றது. இன்னம் உன்னையும் சரிப்படுத்த வேண்டுமா? அவன் உன்னை அடிப்பதில்லை என்று சொல்லி இருக்கிறன் வா.

பூ. அப்பா! அவன் என்னை அடிக்காமலே இருக்கட்டும்.

(பூபேந்திரனும் மிருகதிருஷ்ணி கையும் வாளை உருவுகிறார்கள்.)

அஜிட்சிங் பிரவேசிக்கிறன்.

அஜி. சற்றுப்பொறுங்கள். சற்றுப்பொறுங்கள். இவர்(மிருக திருஷ்ணிகையை சாந்தசீலன் என்று எண்ணிக்கொண்டு) ஏதாவது குற்றம் செய்திருந்தால் அக்குற்றத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

சோ. நீங்கள் யாரையா, அவர் குற்றத்தை உங்கள்பேரில் ஏற்றுக்கொள்வதற்கு?

அஜி. நான் அவருடைய சினேகிதன். அவருக்காக என் உயிரைக் கொடுத்தாலும் கொடுத்து விடுவேன்.

சோ. அப்படியா! ஆனல் வாருங்கள் சண்டை செய்வோம்.
(இருவரும் கத்தியை ஓங்குகிறார்கள்.)

இராஜாதிகாரிகள் பிரவேசிக்கிறார்கள்.

பாபு. சோமதாதா! சற்று இரு. இதோ இராஜாதிகாரிகள் வந்து விட்டார்கள்.

சோ. சற்றுப் பொறுங்கள் ஐயா! பிறகு சண்டை செய்யலாம்.

ரா 1. இவனைத் தேடித்தான் நாம் இங்கு வந்தோம். இவனைப் பிடித்துக்கொள்.

ரா 2. அஜிட்சிங்! இராஜா கட்டளைப் பிரகாரம் நாங்கள் உன்னைப் பிடித்துக் கொண்டு போகப் போகிறோம். நீ என்ன சொல்கிறாய்?

அஜி. ஐயா! நானல்ல அஜிட்சிங்; என்னைத் தப்பாக எண்ணிக்கொண்டு விட்டீர்களா?

ரா 1. சீ! நீ தான் அஜிட்சிங் சந்தேகமேயில்லை. நீ உன் கப்பலோட்டி உடுப்பைப் போட்டுக் கொண்டிருக்கா விட்டாலும் எங்களுக்கு உன்னைத் தெரியாதென்று எண்ணவேண்டாம்.

அஜி. நான் என்ன செய்வேன்? வாவேண்டியது தான். (மிருகதிருஷ்ணிகையைப் பார்த்து) நான் உன்னைத் தேடிவந்ததின் பலன் இதுதான். எனக்கு நேரிட்டிருக்கும் சந்தர்ப்பத்தினல், நான் உன்னிடம் கொடுத்

திருக்கும் பணத்தில் கொஞ்சம் கொடுக்கும்படி கேட்க வேண்டியதாகிறது. ஆகவே பணப்பையை என்னிடம் கொடுக்கிறாயா ?

ரா 2. பணமாவது பிணமாவது சீக்கிரம் வா போகவேண்டும்.

அஜி. தாமதிக்க வேண்டாம் கொடு.

மிரு. ஏது பணம் ? என்னைச் சண்டையினின்று காப்பாற்றினதற்காகவா பணம் கேட்கிறீர்கள் ? என்னிடத்தில் கொஞ்சந்தானிருக்கிறது. வேண்டுமானால் இந்த இரண்டு ரூபாயை வாங்கிக்கொள்ளுங்கள்.

அஜி. நான் உனக்கு உபகாரம் செய்ததற்கெல்லாம் இதுதானே பிரதிப் பிரயோசனம் ? நான் கொடுத்த பணத்தைத் திருப்பிக்கொடுக்கக் கூடவா உனக்கு மனம் வரவில்லை ? உன்னைப்போல் ஏமாற்றுகிறவர்கள் ஒருவருமே கிடையாது.

மிரு. ஐயா ! முதலில் உங்களை எனக்குத் தெரியவே தெரியாது. பணம் என்னிடம் கொடுத்தேனென்று சொல்கிறீர்களே ? அப்படிக் கொடுத்திருந்தால் எனக்குத் திருப்பிக் கொடுப்பதில் தடையே கிடையாது.

அஜி. ஆ ! தெய்வமே ! ! இப்படியும் பொய் சொல்வார்களா ?

ரா 2. சீக்கிரம் வா. போகவேண்டும்.

அஜி. ஐயா ! ஒரு வார்த்தை மாத்திரம் கேட்கவேண்டும். இதோ இவனை நான் அலைகளினின்றும் காத்துப் பிழைக்கச் செய்தேன். இவனை இதுவரையில் என் பிரிய நண்பனாகவே எண்ணி இருந்தேன்.

ரா 1. அவை யெல்லாம் எங்களுக் கென்னத்திற்கு? கால தாமதம் ஆகிறது. சீக்கிரம் வா.

அஜி. சாந்தசீலா! இது உனக்கு நன்றாயிருக்கிறதா? நான் உனக்கெவ்வளவு உபகாரம் செய்திருக்கிறேன். மனித னுக்குக் கீர்த்திதானழகு—

ரா 1. அடே! இவனுக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறது. இவனை இழுத்துக்கொண்டு தான் போகவேண்டும்.

அஜி. எல்லாம் விதிதான் காரணம். இதோ வந்து விட் டேன். (ராஜாதிகாரிகள் அஜிட் சிங்கை இழுத்துச்செல் கிறார்கள்.)

மிரு. இதென்ன! இவன் நம்மிடத்தில் பணங் கொடுத்த தாக இவ்வளவு உறுதியாகச் சொல்கிறானே? ஒரு வேளை என் சகோதரன் உயிர் தப்பிப் பிழைத்திருந்து அவனிடம் பணம் கொடுத்திருப்பானே? நானும் என் சகோதரனும் ஒரே மாதிரியாகத்தான் இருப் போம். அவன் என்னைச் சாந்தசீலன் என்று கூட அழைக்கவில்லையா? சரிதான் உண்மையாகவே என் சகோதரன் பிழைத்திருக்கிறான். ஆ! கடவுளின் மகி மையே மகிமை! (பாடுகிறாள்)

ராகம் - தன்யாசி.

'கனகசபாபதி தரிசனம்' என்கிறமெட்டு.

பல்லவி.

ஆதிமூலமே என்று ஓலமிட்டலறிய
யானையைக் காக்கவில்லையோ (ஆதி)

அனுபல்லவி.

சோதியே ஆதியே - சுயம்பிரகாசமே
தூயவனே நெடு - மாயவனே முன்னம் (ஆதி)

சரணம்.

கொடியனுங்கௌரவன் - கோதைதிரௌபதிதன்
நெடியதுகில்களைய - நேர்ந்திட
தருணத்தில்தஞ்சமென்ற - தையலைக்கைவிடாமல்
அருள்புரிந்தாதரித்த - அச்சுதனேமுன்னம் (ஆதி)

அப்படிப்பட்ட ஜகதீசன் என்னைக் கைவிட்டு விடுவாரா? விடமாட்டார். (போகிறாள்)

முன்றாமங்கம் முற்றிற்று.

நான்காம் அங்கம்.

முதல் காட்சி.

சந்திரவதனி மாளிகைக்கருகில் சாபுவும் சாந்தசீலனும் பிரவேசிக்கிறார்கள்.

சாபு. ஐயா! என் யஜமானியாகிய சந்திரவதனி தங்களை அழைத்து வரச் சொன்னாள்.

சாந். சந்திரவதனையாவது என்னைக் கூப்பிடவாவது உனக்கேதாவது பைத்தியம் பிடித்திருக்கிறதோ? என்னிடம் நில்லாதே போ.

சாபு. பேஷ்! நன்றாயிருக்கிறது. சந்திரவதனி தங்களுக்குத் தெரியாதோ? உங்கள் பெயர் சாரசர் அல்லவா? உங்களை எனக்குக் கூடத் தெரியுமே.

சாந். அடே! உன் பயித்தியத்தை மற்றொருவனிடம்போய் காட்டு; என்னிடத்தில் வேண்டாம்.

சாபு. மற்றொருவனிடத்தில் காட்டுகிறதா? இந்த வார்த்தையை எங்கிருந்தோதா கற்றுக்கொண்டு வந்து இங்கு என்னிடத்தில் உபயோகப்படுத்துகிறன். அதிருக்கட்டும்; ஐயா! என் எஜமானியிடம் போய் என்ன சொல்வது?

சாந். என்னைத் தொந்தரவு செய்யாதே. எனக்கிவ்வூரில் ஒருவரையும் தெரியாது. உனக்குப் பணமாவது கொடுக்கிறேன். நீ என்னை விட்டுப் போனால் போதும்.

(பணம் கொடுக்கிறன்).

சாபு. பேஷ்! கொஞ்சநாழிகைவேறு பேசிக்கொண்டிருந்ததிலேயே எனக்குப் பணம் அகப்பட்டு விட்டது.

பூபேந்திரனும், சோமநாதனும், பாபுவும், சாந்தசீலனை சாரசன் என்று எண்ணிச் சண்டைக்கு வருகிறார்கள்.

பூ. என்ன! சாரசா முன்தான் தப்பித்துக்கொண்டுபோய் விட்டாய். எங்கே இப்பொழுது தப்பித்துக்கொண்டு போ பார்ப்போம். இதோ பார் அடி. (அடிக்கிறன்)

சாந். அடே! உன்னை விட்டேனே. இதோபார்.

(அவனை அடிக்கிறன்)

இதென்ன இவ்வூரில் இருப்பவர்களெல்லாம் பயித்தியமோ?

சோ. அடே பயலே! நில்லுடா அங்கே! மண்டையை உடைத்து விடுகிறேன்!

சாபு. சரி சரி. இதை நான் உடனே சந்திரவதனியிடம் போய் சொல்லிவிடுகிறேன். (போகிறான்)

சோ. வாடா மறுபடியும் வா!

பூ. நில்லுடா அங்கே. என்னை அடிக்கிறாயா? உனக்கு அவ்வளவு தைரியமா?

சாந். என் கையை விடுடா; நான் போகவேண்டும்.

சோ. அதெல்லாம் முடியாது.

சாந். முடியாதா, சரி நில்லு. எடுவாளை ஒரு கைபார்த்து விடலாம். (வாளை எடுக்கிறான்)

சோ. வாளையா எடுக்கிறாய்? வாசண்டைக்கு.

சந்திரவதனி பிரவேசிக்கிறாள்.

சந். சோமநாதா! பொறு பொறு! நில்லு!

சோ. என்ன?

சந். அடேமடையா; உனக்குப் புத்தியும் இப்படிப்போ குமா? நாகரிகமில்லாத மடையனைப்போலல்லவா இப்பொழுது செய்யத்தொடங்கினாய். என் அருமை யான சாரசா! தாங்கள் கோபித்துக் கொள்ளவேண் டாம்.—நீங்கள் எல்லாரும் இவ்விடத்தை விட்டுச்செல் லுங்கள். (சோமநாதன் பூபேந் திரன் பாபு இவர்கள் போகிறார்கள்)

சாரசா! இவன் எப்போது மிப்படித்தான். ஆகவே நீங்கள் கோபிக்கவேண்டாம். அவன் உங்களோடு சண்

டைசெய்தபோது எனக்கு மனது எவ்வளவு துடித்தது தெரியுமா ?

சாந். இவனென்ன ஒரு மனிதனே ?

சந். தாங்கள் கோபிக்கக்கூடாது. அதிருக்கட்டும். நான் தங்களிக்குச் சொல்லியபடி கேட்கமாட்டீர்களா ?

சாந். அம்மா ! எனக்கு உதவிசெய்த உங்கள் வார்த்தை யைக்கூடத் தட்டுவேனே ? ஒருபொழுதும் அப்படிச் செய்யமாட்டேன்.

சந். ஆ ! அப்படிச் சொல்லுங்கள். நாம் போவோம் வாருங்கள். (போகிறார்கள்)

இரண்டாம் காட்சி.

சந்திரவதனியின் மாளிகையில் நீலலோசனியும் சாபுவும் பிரவேசிக்கிறார்கள்.

நில. அடே சாபு ; இந்த உடுப்பைப்போட்டுக்கொள். இந்த தாடியையும் கட்டிக்கொண்டு ஒரு பெரிய வைத்திய னைப்போல் வேடம் போட்டுக்கொள். மகிபாலனிடம் போய் செய்யவேண்டிய தென்னவென்று தெரியுமோ இல்லையோ ? சீக்கிரம் போ. (போகிறாள்)

சாபு. (தனக்குள்) பேஷ் ! நமக்கு நல்ல உடுப்பு அகப்பட்டு விட்டது. அதை மாட்டிக்கொள்வோம் (மாட்டிக் கொள்கிறான்) அடே ! நாம் எவ்வளவு அழகாயிருக் கிறோம் பார்த்தாயா ? இன்னும் கொஞ்சம் உயரமாக மாத்திரம் இருந்துவிட்டால் மிகவும் நன்றாயிருக்கும்.

சோமநாதனும் நீலலோசனியும் பிரவேசிக்கிறார்கள்.

சோ. என்ன கபாலமோட்சனைவத்தியரே ! இதோநமஸ்காரம் செய்கிறேன். தாங்கள் எமதர்மராஜனுக்கு சகோ

தார் அல்லவா? எமன் உயிரை மாத்திரம் கொண்டு போக முடியும். தாங்கள் உயிரையும் பணத்தையும் கொண்டுபோய் விடுவீர்களே? பயித்தியத்திற்கு மருந்தென்ன கொஞ்சம் சொல்லும்.

சாடு. கொஞ்சம் பித்தம் அதிகமாய் விட்டால் நம் வைத்தியத்தில் ஊமத்தங்காயைக் கொடுக்கச் சொல்லியிருக்கிறது. புளுனி வைத்தியத்தில் எட்டிக்கொட்டையில் சர்க்கரைசேர்த்து கொடுக்கும்படி சொல்லியிருக்கிறது. ஆங்கிலேய மருந்தில் கொஞ்சம் குளோரோபாம் கொடுக்க வேண்டும். இவைகளில் எது சரியாகக் கேட்கும் என்று யோசித்துக்கொண்டு இருக்கிறேன்.

சோ. சாபு! இதோ இருக்கிறான் பார் மகிபாலன்.

சாபு. இதென்ன இவ்வறையில் நிச்சப்தமா யிருக்கிறதே? உள்ளே யார் இருப்பது.

மகி. (உள்ளே இருந்துகொண்டே) யார் அங்கே கும்பிடுவது?

சாபு. பயித்தியம் பிடித்த மகிபாலனை கபாலமோட்ச வைத்தியாகிய நான் பார்க்க வந்திருக்கிறேன்.

மகி. வைத்தியரே! வைத்தியரே!! என் யஜமானியிடம் கொஞ்சம்போய் சொல்லுங்களேன்.

சாபு. சீ! இதென்ன பைத்தியம்? எப்பொழுதும் யஜமானி நினைவுதானே? இவனுக்குப் பெண் பயித்தியந்தான்.

சோ. பேஷ்! பேஷ்!!

மகி. வைத்தியரே! எனக்குப் பயித்தியமுமில்லை ஒன்று மில்லை. வேண்டுமென்றுவது பைத்தியம் என்று பேர் வைத்து இந்த இருட்டறையில் என்னை அடைத்து வைத்திருக்கிறார்கள்.

சாபு. ஓகோ! இந்த அறை இருட்டாகவா இருக்கிறது?

மகி. நரகத்தைப்போல் அவ்வளவு இருட்டாகத்தான் இருக்கிறது. வைத்தியரே! உங்களுக்குத் தெரியவில்லையா?

சாபு. என்! அதோ ஒரு பலகணி இருக்கிறதே. வெளிச்சம் இல்லை என்று ஏன் சொல்கிறாய்?

மகி. எனக்குப் பயித்தியமே இல்லை. நிஜமாகவே இவ்வறை இருட்டுத்தான்.

சாபு. இங்கு இருட்டே கிடையாது. உன் மூளைதான் கலங்கி இருக்கிறது.

மகி. ஐயோ! எனக்கப்படி ஒன்றுமில்லையே? என் கையை வேண்டுமானாலும் பிடித்துப் பாருங்கள்.

சாபு. எங்கே! கைநீட்டு பார்ப்போம்—நாடியே அடிக்க வில்லையே! எங்கே நாக்கை நீட்டு. சரி! சரி!! பயித்தியம் பிடித்துத்தான் இருக்கிறது. சந்தேகமே இல்லை.

மகி. வைத்தியரே! வைத்தியரே!! போய்விடாதீர்கள்.

சோ. நல்ல வைத்தியர் எனக்குக் கொஞ்சம் பேதிக்குத் தருகிறீர்களா?

சாபு. ஆகா இருட்டறைக்குள் அடைத்துப் போட்டுவிட்டால் பேதிதான்!

சோ. சாபு! நீ மறுபடியும் உன் நிஜக்குரலோடு போய்ப்பேசு. அவன் சொல்வதைத் தெரிந்துகொண்டு நான் இருக்குமிடம் வந்து சேர். (சோமநாதனும் பூபேந்திரனும் போகிறார்கள்)

சாபு. (நிஜக்குரலுடன்) மகிபாலா! மகிபாலா!!

மகி. அடே சாபு! இங்கே வாடா இங்கே வாடா.

சாபு. என்ன! மகிபாலா சமாசாரம் என்ன?

மகி. அடே! எல்லோரும் சேர்ந்து இம்மாதிரி என்னைச் செய்து விட்டார்களேடா என்ன செய்வது? நீ இப்பொழுதிருப்பதுபோல் தானே நானும் சுயபுத்தியோடிருக்கிறேன். எனக்குப் பயித்தியம் என்று பேர் வைத்து விட்டார்களேடா?

சாபு. என் மாதிரி இருந்தால் என்னைப்போல் நீயும் பயித்தியம் தானே?

மகி. என்னை இருட்டறையில் வைத்ததுமல்லாமல் ஒரு தடி வைத்தியனையும் என்னிடம் அனுப்பி விட்டார்கள். அவன் என்னைப் பயித்தியம் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

சாபு. உனக்கு வைத்தியனல் என்ன ஆகவேண்டும்? இதோ இருக்கிறார் அவர் (வேறு குரலுடன்) மகிபாலா! மகிபாலா!! நீ ஒருவரோடும் பேசாமல் தூங்கு. அப்போது தான் பயித்தியம் தெளியும்.

மகி. வைத்தியரே! வைத்தியரே!!

சாபு. (நிஜக்குரலுடன்) அந்தத் தடி வைத்தியரைடு உனக்கென்ன வார்த்தை அவன் போகட்டுமே? வைத்தி

யரே நீங்கள் போய் வருகிறீர்களா? (வேறு குரலு டன்) போய் வருகிறேன்.

மகி. சாபு! எனக்கு ஒரு விளக்கும் காகிதம் பேனவும் சீக்கிரம் கொண்டு வந்து கொடுப்பாயா? நான் ஒரு கடிதம் எழுதவேண்டும்.

சாபு. ஆகா கொண்டுவந்து கொடுக்கிறேன். உனக்குப் பயித் தியம் நிஜமாகத் தானே பிடித்திருக்கிறது? என்னி டத்தில் சொல்லு.

மகி. சீக்கிரமாகப் போய் நான் கேட்டவைகளை எனக்குக் கொண்டு வா. சீக்கிரம் போ. (சாபு போகின்றான்)

மூன்றாம் காட்சி.

சந்திரவதனியின் தோட்டத்தில் சாந்தசீலன் பிரவேசிக்கிறான்.

சாந். (தனக்குள்) என்ன! சற்றுமுன் என்னையாரோ ஒரு மாது தன் வீட்டுக்கழைத்துச் சென்றனளே? எனக்கு அப்போது ஒன்றும் தெரியவில்லையே. இம்முத்து மாலையை என்னிடம் போட்டுக்கொள் என்று கொடுத் தாளே. அது என்ன காரணமா யிருக்கக்கூடும். ஒரு வேளை என்மீது அப்பெண் காதல் கொண்டிருக்க லாமோ? நானும் அவளை மணம் செய்து கொள்கி றேன் என்று வாக்களித்து விட்டேன். சரிதான் என்னைத்தானவள் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாள். அதில் சந்தேகமில்லை. ஆ! நாம் நினைக்கா திருக்கும்போதே நமக்கு ஆபத்தும் சம்பத்தும் சேர்ந் துவிடுகின்றதே.

'ஒன்றை நினைக்கினது ஒழிந்திட் டொன்றுகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனை யாளு மீசன் செயல்'

என்பது போலல்லவாயிருக்கிறது.

அதிருக்கட்டும் நம் அருமைத் தோழனை அஜிட்சிங் எங்கு சென்றிருப்பான்? அவன் எனக்குச் சொல்லிய விடத்தில் அவனைப்போய்ப் பார்த்தேன். அவன் அங்கு அகப்படவில்லையே. ஆனாலும், அவன் அங்கு வந்திருந்ததாக அங்குள்ளவர்கள் எனக்குச் சொன்னார்களே. அவன் ஒருவேளை என்னைத் தேடிக்கொண்டு இங்ஙகரத்துக்குள் வந்திருக்கக் கூடுமோ. அவன் இப்போது இங்கிருப்பானேயானால் அம்மாதாசியின் எண்ணத்தை எடுத்துரைப்பான். நான் அவளோடு பேசிக் கொண்டிருந்தது எல்லாம் எனக்கொரு கனவுபோலத் தோன்றுகிறதே! சீ! கனவல்ல. அம்மாது தன் ஆட்களுக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தாளே! எனக்கும் முத்துமாலையையும் கொடுத்திருக்கிறாளே! இதெப்படிக் கனவாகும்? இதில் ஏதோ விசேஷம் இருக்கிறது. என்ன பார்ப்போம்.—இதோ அம்மாது என்னிடம் மறுபடியும் வந்து விட்டாளே.

சந்திராவதனி ஒரு சாஸ்திரியை அழைத்துக்கொண்டு பிரவேசிக்கிறாள்.

சந்தி. ஐயா! தங்களிடத்தில் என் காரியத்தை அதிசீக்கிரம் முடித்துக் கொள்வதில் என்பேரில் கோபங்கொள்ள வேண்டாம். தாங்கள் என்னோடு இதோ அருகிலிருக்கும் கோயிலுக்கு வரவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்: இந்த சாஸ்திரிகள் முன்னிலையில் 'நான்

உன்னை மணம்புரிகிறேன்' என்று பிரதிக்ஞை செய்ய வேண்டும். இவர் ஒருவரிடத்திலும் வெளியிடமாட்டார். போகலாம் வாருங்கள்.

சாந். பெண்மணி! இதோ வந்து விட்டேன். நான் உன்னையே மணம்புரியப் போகிறேன். அதில் கொஞ்சமேனும் சந்தேகம் கிடையாது. (போகிறார்கள்)

நான்காவதங்கம் முற்றிற்று.

ஐந்தாம் அங்கம்.

முதல் காட்சி.

சந்திரவதனியின் மாளிகைக் கெதிரில் சாபுவும் பாபுவும் பிரவேசிக்கிறார்கள்.

பாபு. அடே சாபு! நீ என் சினேகிதன் அல்லவா? ஆகையில் அது என்ன கடிதம் கொண்டு வா பார்ப்போம்.

சாபு. பாபு! எனக்கு நீ ஒரு வரம் மாத்திரம் கொடுக்க வேண்டும்.

பாபு. ஒன்றுதானே? கேள். இதோ கொடுத்து விடுகிறேன்.

சாபு. ஒன்றுமில்லை. இக்கடிதத்தை நீ பார்க்கக்கூடாது. இந்த வரந்தான் வேறன்று.

பாபு. பேஷ்! முதலில் எனக்கு ஒரு நாயைக் கொடுத்து விட்டு பிறகு அந்த நாயையே திருப்பிக்கொடு என்று கேட்கிறாப்போல இருக்கிறதே?

ஜயசிங்கன், மிருகதிருஷ்ணிகை, கருணகான் இவர்கள் பிரவேசிக்கிறார்கள்.

ஜய. நீங்கள் சந்திரவதனியின் வேலையாட்களா ?

சாபு. ஆமாம் ஐயா ! நாங்கள் அவள் வேலையாட்கள் தான்.

ஜய. அடே சாபு ! உன்னை எனக்கு நன்றாய்த் தெரியும். நீ சுகந்தானே.

சாபு. ஆமாம் ஐயா ! என் சினேதர்களுக்குக் கெட்டவனாகவும் சத்துருக்களுக்கு நல்லவனாகவும் சுகமாயிருக்கிறேன்.

ஜய. திருப்பிச் சொல்லி விட்டாயே; சினேகிதர்களுக்கு நல்லவனாகவும் சத்துருக்களுக்குக் கெட்டவனாகவும் என்றல்லவா சொல்லவேண்டும் ?

சாபு. இல்லை. நான் சொல்வதுதான் உண்மை.

ஜய. அதெப்படி சொல் பார்ப்போம்.

சாபு என் அரசே ! என் சிநேகிதர்கள் என்னை எப்பொழுதும் பயித்தியமாக்குகிறார்கள். என் சத்துருக்களோ என்னை எப்பொழுதும் கழுதை கழுதை யென்று சொல்லி விடுகிறார்கள். ஆகையினால் என்சத்துருக்களினின்று என் நிஜஸ்வரூபத்தை நான் தெரிந்து கொண்டு விடுகிறேன். ஆகையினால் தான் எனக்கு சத்துருக்கள் உதவி செய்கின்றார்கள். அவர்களுக்கு நான் நல்லவனாகவு மிருக்கிறேன்.

ஜய. பேஷ் மிகவும் நன்றாயிருக்கிறது. என்னைச் சந்தோஷப் படுத்தியதற்காக இந்தா ஒரு சவரன் இனம்.

சாபு. ஐயா ! பணம் என்பது மிகவும் கெட்டது. ஏனெனில், அதை என் கைகளினால் தொட்டுவிட்டேனாகில் என்

கை மிகவும் பாவம் செய்ததாய் விடும். ஆகையினால் நான் பணத்தைத் தொடமாட்டேன்.

ஜய. சரிதான் ஒரு சவான் கொடுத்தால் வாங்கமாட்டாய் போலிருக்கிறது. இந்தா இரண்டு.

சாபு. கொடுங்கள் இப்போது வாங்கிக் கொள்கிறேன். 'பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கு'மல்லவா (வாங்கிக் கொள்கிறான்) இன்றைக்கு இரண்டு பவுன் அகப்பட்டது போதும். மறுபடியும் நாளைக்கு வருகிறேன் ஐயா. (போகிறான்)

அஜிட்சிங் ராஜாதிகாரிகளோடு பிரவேசிக்கிறன்.

மிரு. ஆசே! இதோ இங்கு வந்திருப்பவன்தான் என்னைச் சண்டையினின்று தப்பித்து விட்டது.

ஜய. ஆ! இவனை எனக்கு நன்றாய்த் தெரியும். இவன் முன் நம் தேசத்தில்தான் இருந்தான். இவனை ஏன் பிடித்துக்கொண்டு வந்தீர்கள்?

ரா 1. ஆசே! உங்களுக்குத் தெரியாதா காரணம்? இவன்தான் முன் உங்களோடு சண்டைசெய்த அஜிட்சிங். இவனை நீங்கள் இராஜ்யத்தினின்று துரத்திவிடவில்லையா? இப்பொழுதிவன் கொஞ்சமேனும் பயமுவெட்கமுமில்லாமல் நம் பட்டினத்திற்கு வந்திருக்கிறான். அதனால்தான் இவனைப் பிடித்துக்கொண்டு வந்தோம்.

ஜய. அடே துரோகி! கப்பற் கொள்ளைக்காரனே! நீ என்ன தைரியத்தைக் கொண்டு என் இராஜ்யத்திற்குள் வந்தாய்? இங்கு அரசுபுரிந்துவரும் அரசன் உன் விரோதி என உனக்குத் தெரியாதா?

அஜி. ஜயசிங்க மன்ன! நீங்கள் கூறும் நிந்தை மொழிகள் என்னத்திற்கு, அஜிட்சிங் ஒருபோதும் கப்பற்கொள் ளைக்கார ஞகமாட்டான். நான் இத்தேசத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தை முன்னிட்டு வந்தேன். உங்கள் பக்கத் திலிருக்கும் அத்துரோகியை நான் கடலினின்று பிழைக்கச் செய்தேன். நாங்கள் இருவரும் மிகவும் ஒற்றுமையாகவே இருந்து வந்தோம். அவனுக்காக வே நான் இக்கஷ்டத்திற் குட்பட்டேன். அவன் பொருட்டே நான் ஒரு வீண்சண்டையையும் மேற் போட்டுக் கொண்டேன். அப்படி இருந்தும் நான் அவனிடம் கொடுத்திருந்த பணப்பையை நான்கேட்ட போது பணமுமில்லை ஒன்றுமில்லை போவென்று கடி ந்து பேசிவிட்டான். இவனைப்போல் உலகில் ஒருமித் திரத் துரோகி இருப்பார்களா?

மிரு. ஐயா! வீண் வார்த்தைகளை ஏன் என்னிடம் பேசு கிறீர்கள்? பணம் எப்பொழுது கொடுத்தீர்கள்?

ஜய. நீ எப்போது இங்கு வந்தாய்?

அஜி. இன்றைக்குத் தான் இங்கு வந்தேன். இதுவரையில் நாங்கள் இருவரும் மிகவும் சினேகமாகத்தா னிருந் தோம்.

சந்திரவதனி பிரவேசிக்கிறாள்.

ஜய. அஜிட்சிங்! நீ சொல்வது முழுப்பொய். இவன் என் னிடம் மூன்று மாதகாலமாய் இருக்கிறான். அடே! இவனை இழுத்துச் செல்லுங்கள். ஆகா! இதோ சந்திரவதனி வந்துவிட்டாள். நான் இவ்வளவு காலம் வருந்தி அழைத்தேன். இன்றைக்குத்தான் பாக்கியம் கிடைத்தது. (பாடுகிறான்)

ராகம் – பிலஹரி.

பல்லவி.

வா வா வா வா மாதாரசே! மாங்குயிலே இளமாமயிலே (வா)

அனுபல்லவி.

வாடி உந்தனைத்தேடி நானிங்கு ஓடிவந்தேனே பார் பார் பார் (வா)

சரணம்.

உள்ளம் உருகவில்லையோ என்மேல் உத்தமியே யன்பிலையோ
வெள்ளமாகவே பெருகுது காதல் விளையாடுவோமுடன் வா வா (வா

சந்திரவதனி! உனக்கு என்மேல் இப்போதுதான் கருணை வந்ததோ!

சந். அரசே! தாங்களெல்லோரும் இங்கு வந்த காரணம் என்ன? (மிருகதிருஷ்ணிகையைப் பார்த்து) சாரசா! நீங்கள் பிரதிக்ஞை செய்த பிரகாரம் நடவடிக்கையிலும் காட்டுவீர்களல்லவோ?

மிரு. அம்மணி! என்ன சொன்னீர்கள்.

ஜய. மாதரசே! என்ன?

சந். நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள்.

மிரு. எனக்குப் பதிலாக என் எஜமானரான அரசன் உங்களோடு பேசுவார்.

சந். எனக்குத் தங்களுடைய மொழிகள்தான் மதுரமாயிருக்குமே யொழிய அரசனுடைய வார்த்தை இனிமையாயிராது. ஆகையினல் நீங்கள்தான் என்னோடு பேசவேண்டும்.

ஜய. என்னைக் கண்டால் உனக்கு இன்னம் பிடிக்கவில்லையா? என்மேல் நீ இன்னும் காதல் கொள்ளவில்லையா?

சங். இப்பொழுது மாத்திரம் என்ன? எப்பொழுதும் அப்படித்தான்.

ஜய. ஆ! இக்கொடிய மங்கையை நான் யாது செய்வேன்? என் உயிரையும் மனதையும் அவளிடம் வைத்திருக்க அவள் மாத்திரம் என்னோடு பேசக்கூடமாட்டேன் என்கிறாளே!

சங். நான் என்ன செய்யட்டும். எனக்கு மனம் இல்லையே?

ஜய. (கோபத்துடன்) உனக்கு மனமில்லையோ? நான் உன் பேரில் இவ்வளவு காதல் கொண்டிருக்க நீ என்னை மணம்புரியமாட்டேன் என்கிறாய் அல்லவா? இருக்கட்டும். நீ மற்றொருவன் பேரில் காதல் கொள்வது நிஜம். நான் அவனை என் வாளால் ஒரு வீசாக வீசி விடுகிறேன். பிறகு நீ யாரை மணம் செய்துகொள்ளப்போகிறாய்? பார்ப்போம். உன்னைப் பழிவாங்காமல் நான் தூங்குவதே இல்லை—சாரசா! வா போகலாம். இவள் முகத்தில் விழிப்பானேன்!

மிரு. (தனக்குள்) அவள் என்னைப் புருஷன் என்று நினைத்து என்பேரில் காதல் கொண்டிருக்கிறாளே. ஒருவேளை என் தலையே போய் விடுமோ. என்னமோ பார்ப்போம்.

சங். சாரசா! தாங்கள் எங்கு போகிறீர்கள்?

மிரு. எனக்கு மிகவும் அருமையான என் யஜமானனைடு.

சந். ஐயோ! என்னை இப்படி மனம் வருந்தும்படி செய்ய லாமா? உங்களுக்கிது அழகோ?

மிரு. என்ன காரணம்? நான் ஏன் உங்களை வருந்தும்படி செய்கிறேன்?

சந். தாங்கள் பிரதிக்ஞையைசெய்த இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விட்டீர்களோ? நீங்கள் பிரதிக்ஞை செய்த தற்குச் சாட்சி கூட இருக்கிறதே. (வேலையாளைப் பார்த்து) அடே! சுப்பாசாஸ்திரிகளை அழைத்துக் கொண்டு வா.

ஜய. சாரசா! அவளோடு என்ன பேச்சு வா போகலாம்.

சந். ஐயோ! என் பிராணநாதா! என்னை விட்டு வரக் கூடாதா?

ஜய. என்ன! யார் பிராணநாதன்?

சந். ஏன் சாரசன்தான். அவர் இல்லையென்று சொல்ல முடியுமா?

ஜய. என்ன சாரசா! நீ அவருடைய பிராணநாதனை?

மிரு. அரசே! நான் என் அவருக்குப் பிராணநாதன் ஆகி றேன்?

சந். ஐயோ! தாங்கள் பயப்படவேண்டாம். அரசன் முன் னிலையில் 'நான்தான் பிராணநாதன்' என்று சொல்வ தற்குப் பயமோ?

சாஸ்திரிகள் பிரவேசிக்கிறார்.

ஐயா! சாஸ்திரிகளே வாருங்கள், எனக்கும் அங்கு தின்று கொண்டிருக்கிறதே அவருக்கும் நடந்த சமா

சாரத்தை அரசன் முன்னிலையில் பயப்படாமல் வெளிப் படுத்துங்கள். என்ன நடந்தது ?

சாஸ். நீங்கள் இருவரும் கோயிலுக்கு வந்து என் முன்னி லையில் சுவாமி சாட்சியாக ஒருவரை ஒருவர் மணம் செய்து கொள்வதாகச் சத்தியம் செய்தீர்கள். அதோ அவர்தான் முதலில் செய்தது. இதுதான் எனக்குத் தெரியும்.

ஜய. அடே சாரசா ! அடே துரோகி ! நீயும் இம்மாதிரி செய்யலாமா ? என் காதலை வெளியிட நான் உன்னை அவளிடம் அனுப்ப, நீயே அவள்பேரில் காதல் கொண்டு விட்டாயே ? அடே பாபி ! என் முன்னிலை யில் நில்லாதே போ ! என் இராஜ்யத்திலிருந்தே உன் னைத் துரத்திவிடப் போகிறேன்.

மிரு. அரசே ! தாங்கள் என்பேரில் இம்மாதிரி கோபிக்க லாகாது. இவள் சொல்வதெல்லாம் முழுப்பொய். நான் அவள் சொல்கிறபடி சத்தியம் செய்ததே இல்லை.

ஜய. சீ ! பொய் சொல்லாதே ! ஒரு பொய்யை மறைக்க மற்றொரு பொய் ஏன் சொல்கிறாய் ?

பூபேந்திரன் பிரவேசிக்கிறன்.

பூ. சீக்கிரம் ! சீக்கிரம் ! ! உடனே ஒரு ரணவைத்தியனைப் பிடித்து சோமநாதனுக்கு அனுப்புங்கள்.

சந். என்ன ! என்ன ! ! சமாசாரம் என்ன ?

பூ. இதோ பாருங்கள் என் மண்டையை உடைத்ததுமல் லாமல் சோமநாதனுடைய தலையையும் உடைத்து

இரத்தப் பிரவாகம் செய்து விட்டான். ஐயோ! என் மண்டை உடையவா நான் இங்கு வந்தேன்!

சந். யார்! யார்!! அப்படிச் செய்தது?

பூ. அந்தத் தடியன்தான் அரசனிடம் இருக்கும் கனவா ணம். அவன்தான் இப்படிச் செய்தது.

ஜய. என்னிடத்தில் இருக்கும் சாரசனை?

பூ. இதோ இருக்கிறனே! இந்தத் தடியன்தான். ஒரு காரணமுமில்லாமல் ஏண்டா என் தலையை உடைத் தாய்? சோமநாதனுக்கு இத்தனை நாழிகைக்குள் உயிர் போயிருக்கும்.

மிரு. (தனக்குள்) இதென்ன! இப்படிக் கஷ்டம் நமக்கு வருகின்றது. ஒன்றுக்குமேல் ஒன்றுக வந்துகொண் டே இருக்கிறதே. ஆ! தெய்வமே! இது உனக் கொரு விளையாட்டோ? அம்மாதோ என்னை மண வாளன் என்று சொல்கிறாள். இவளை என்னை மண் டை உடைத்து விட்டாய் என்று சொல்கிறான். இன் னும் என்னகஷ்டம் வரக் காத்துக்கொண் டிருக்கி றதோ. தெரியவில்லையே'! (பாடுகிறாள்.)

ராகம் - ஆரபி.

பல்லவி.

இன்னும் தயவுவர ஈசனே கைலகிரி — இல்லையோ என்மேல் மேவிய வாசனே (இ)

அனுபல்லவி.

பேதமைப் புத்தியுள்ள ஆதரித்தருளவேண்டும் — பெண்ணல்லவோ ஈசா! அம்பிகை நேசா (இ

சாணம்.

மங்ணையாம் என்னைத் தங்கை என்றறியாமல்
மையல் கொண்டாளே யோர்மாதுமே என்மீது
தந்தைதாயு மில்லாமல் தமயனையும் விட்டு
இந்த வங்கநாட்டில்வந்து வருந்தவுமானேன்
மன்னவனிடம் வந்து மண்டை உடைந்ததென்று
வாய்மைபோலப் பேசி வருந்தி முறையிட
அன்னவன் என்மேல் கோபங்கொள்ள நான்
என்ன செய்வதென்று யோசிக்க விதியோ (இ)

(பூபேந்திரனைப் பார்த்து) ஐயா! என் மீணுக என் மேல் குற்றம் சாட்டவேண்டும்! நான் உங்களுக் கொரு அபகாரமும் செய்ய வில்லையே.

பூ. ஏண்டா! அடித்தது மல்லாமல் பொய்யையும் சொல்கி ருயே?

சோமநாதனும் சாபுவும் பிரவேசிக் கிறார்கள்.

இதோவந்து விட்டான் சோமநாதன் அவனைக்கேள்.

ஜய. ஐயா! என்ன சமாசாரம்?

சோ. என்ன சமாசாரமாவது மண்டை உடைந்த சமாசாரந் தான். அடே சாபு! வைத்தியன் வீட்டி லிருப் பானே?

சாபு. இப்பொழுது வைத்தியன் வீட்டுக்குப்போயிருந்தேன். அவன் எங்கேயோ கீழே வீழ்ந்து அவனும் மண் டையை உடைத்துக் கொண்டுவந்திருக்கிறான். அங்கு போவதில் பிரயோசன மில்லை.

சோ. இதென்ன எல்லோருக்கும் மண்டையே போகிறுப் போல் இருக்கிறதே.

சந்தி. சோமதாதனை அழைத்துச் செல்லுங்கள். அவன் காயத்திற்கு மருந்து போடச் சொல்லுங்கள்.

பூ. சோமதாதா! போவோம் வா! இரண்டுபேரும் தலையில் கட்டுக் கட்டிக் கொள்வோம் வா.

(போகிறார்கள்.)

இரண்டாம் காட்சி.

சந்திரவதனியின் மாளிகையில் சந்திரவதனி, ஜயசிங்கன் மிருகதிருஷ்ணிகை அஜிட்சிங் இவர்கள் நின்றுகொண்டிருக்க, சாந்தசீலன் பிரவேசிக்கிறான்.

சாந். சந்திரவதனி! நான் இவ்வளவு நேரம் வெளியே சென்றிருந்த தற்காக என்னை மன்னித்துக் கொள். நான் மற்றொரு காரியமும் செய்து விட்டேன். உன்னுடைய உறவினன் என்று தெரியாமல் சோமதாதனை அடித்து விட்டேன், என்னை மன்னிப்பாயாக.

ஜய, இதென்ன ஆச்சரியம்! சாரசனும் இவனும் ஒரே மாதிரியாக இருக்கின்றார்களே! ஒரே முகம் ஒரே குரல். ஒரே உடுப்பு, இதென்ன?

சாந். (அஜிட் சிங்கைப்பார்த்து விட்டு) ஆ அஜிட்சிங்! நான் உன்னை இவ்வளவு நேரம் பாராமலிருந்த தனுல்என்மனம் எவ்வளவு வருந்திற்றுத் தெரியுமா?

அஜி. நீயார் சாந்த சீலனே!

சாந். என்ன! கனவுகாண்கிறாயோ? என்னை உனக்குத்தெரியவில்லையா? நான் சாந்த சீலன் என்பதில் சந்தேகம் வந்து விட்டதா என்ன?

அஜி. இதென்ன! விந்தையா யிருக்கின்றதே!! இவனும் (மிருக திருஷ்ணிகையைக் காட்டி) உன்னைப் போலவே இருக்கின்றானே? இதில் யார் சாந்தசீலன்?

சாந். இதென்ன? நானே அங்கு நின்று கொண்டிருக்கிறேனே? இவன் என்னைப் போலவே இருப்பதற்கு எனக்குச் சகோதரர்களு மில்லையே. எனக்கு ஒரு சகோதரி மாத்திரம் இருந்தாள், அவளும் கடலில் விழுந்து மூழ்கி இறந்து விட்டாளே. ஐயா! உங்கள் பெயர் என்ன? நீங்கள் எந்ததேசம்?

மிரு. நான் சௌராஷ்டிர தேசம். அந்நாட்டு அரசன்தான் என்தந்தை. உங்களைப் போலவே சாந்தசீலன் என்று பெயர் கொண்ட ஒரு சகோதரன் எனக்கிருந்தான். ஆனால் அவன் சமுத்திரத்தில் மூழ்கி இறந்துவிட்டான். உங்களைப் பார்க்கும்போது என் சகோதரன் ஞாபகம் வந்து விட்டது.

சாந். ஆகா! இது என்னமாயம்? ஐயா! நீங்கள் மாத்திரம் பெண்ணைக இருக்கும் பட்சத்தில் நிங்கள் என்சகோதரியாகிய மிருகதிருஷ்ணிகையே, அதிற் சந்தேகமே கிடையாது.

மிரு. என் தந்தைக்கு நெற்றியில் ஒரு மச்சம் உண்டு.

சாந். ஆமாம் என் தந்தைக்கும் அதேமாதிரி ஒரு மச்சம் இருந்தது.

மிரு. என் தந்தைஅவர் மகளாகிய மிருகதிருஷ்ணிகைக்கு பதின்மூன்று வயதுநிறைந்தவுடன்சிவபதமடைந்தார்.

சாந். ஆ! அது என்மனதில் எப்போழுதும் இருந்து கொண்டு விசனப் படுத்திக் கொண் டிருக்கிறது.

மிரு. இன்னும் உங்களுக்கு நிஜ முண்டாக்கு வதற்கு என் நிஜஸ்வரூபத்தைத் தெரியப் படுத்துகிறேன். நான் ஆண்வேடம் பூண்டிருப்பதி னலேயே என்னைப் புருஷன் என்று எண்ணிவிட வேண்டாம். நான் உங்க ளுடைய சகோதரியாகிய மிருகதிருஷ்ணிகைதான். அதிற் சந்தேகமில்லை. நான் படவேறிக் கரைவந்து சேர்ந்து இவ் வாசனிடம் ஆண்வேடங்கொண்டு ஆளாக அமர்ந்தேன். இதற்குச் சாட்சியாக என்னைக் காப் பாற்றிய கப்பலோட்டி இவ்வூரிலேயே இருக்கிறான்.

சாந். ஆ! என்சகோதரி! (ஆலிங்கனம் செய்து கொள்கி றான்) சந்திர வதனி! நான் மாத்திரம் சமயத்தில் வந் திருக்கா விட்டால் நீ ஒரு ஸ்திரீயைத்தான் மணம் செய்து கொண் டிருக்கவேண்டும்.

ஜய. என்ன ஆச்சரியம்! இப்பூமியில் இருவர் ஒரே மாதிரி யாய் இருப்பார்களா? (மிருகதிருஷ்ணிகையைப் பார்த்து) சாரசா! சீ! மிருக திருஷ்ணிகா! நீ என் னிடம் அடிக்கடி என்னைப்போல் மோகங் கொள்ள மாட்டாய் என்று சொன்னையே? நீ பெண்ணுக விருந் தும் அப்படிச் சொல்லலாமா?

மிரு. வேஷத்திற்குத் தகுந்தபடிதானே வார்த்தையும் சொ ல்லவேண்டும். அதில் பிசகு ஒன்றுமில்லை.

ஒருகடிதத்தோடு சாபுவும் பாபுவும் பிரவேசிக் கிறார்கள்.

சந். அடேசாபு? மகிபாலன் எங்கே? அவன் எப்படி இருக் கிறான்?

சாபு. அம்மா! இதோ தங்களுக்கு ஒருகடிதம் எழுதியிருக் கிறான். இதை உங்களிடம் இன்று காலையிலேயே

கொடுத்திருக்க வேண்டும். தவறிப் போய் விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள்.

சந். அதைப் படி பார்ப்போம்.

சாபு. இதோ வாசிக்கிறேன் மூடனுடைய கடிதத்தைப் பயித்யம் பிடித்தவன் தான் படிக்க வேண்டும.

சந். அடே! இவன் குறும்பு செய்கிறான். பாபு நீ கடிதத்தை வாங்கி வாசி.

பாபு. (வாசிக்கிறான்)

சந்திரவதனிக்கு ஊழியனான மகிபாலன் தெரிவித்துக் கொள்வதாவது.—உங்களுடைய கட்டளையினால் தான் என்னைப் பயித்தியம் என்றண்ணி ஒரு இருட்டறையில் வைத்து மூடியிருக்கிறார்கள். நான் உங்கள் பேரில் காதல் கொள்ளும்படி நீங்கள் எனக் கெழுதிய கடிதம் என்னிடத்திலிருக்கிறது. ஆகவே நான் படும் கஷ்டத்தினின்று என்னை நீக்குவது உங்கள் கடமை.

இப்படிக்கு,

பயித்தியனைக்கப் பட்ட மகிபாலன்.

சந். இதை மகிபாலனை எழுதினன்?

சாபு. ஆமாம் அம்மணி!

சந். ஐயோ பாவம்! பாபு நீ போய் அவனை இங்கு அழைத்துக் கொண்டுவா. (பாபு போகிறான்)
அரசனே! என்னை நீங்கள் மணம் புரிய எண்ணி இருந்தீர்கள். நானோ சாந்தசீலனை மணம் செய்து கொண்டு விட்டேன். நீங்களும் மிருகதிருஷ்ணி

கையைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டியது. அப்படிச் செய்து கொண்டு விட்டால் நான் உங்களுக்கு மைத்துனி ஆய் விடுகிறேன்.

ஜய. அப்படியே செய்து கொள்கிறேன். (மிருகதிருஷ்ணி கையைப் பார்த்து) பெண்மணி! நீ என்னை எப் பொழுதும் எஜமானன் என்று சொல்லிக் கொண் டிருந்தபடிக்கே நானுனக்கு நிஜமான எஜமானனாய் விட்டேன்.

சந். மிருகதிருஷ்ணிகா! நீ எனக்கு நாத்தியாய் விட்டாய்! நோபக மிருக்கட்டும்.

பாபு மகிபாலனை அழைத்துக் கொண்டு பிரவேசிக்கிறன்.

ஜய. இவன் தானே பயித்தியம் பிடித்தவன்.

சந். ஆம்! இவன்தான்! என்ன விசேஷம் மகிபாலா?

மகி. சந்திரவதனி! நீ என் விஷயத்தில் மிகவும் குரூரமா யிருந்து விட்டாய்.

சந். நான் குரூரமா யில்லையே!

மகி. நீங்கள் கட்டாயம் என்னிடத்தில் மிகவும் கடினமா யிருந்து விட்டீர்கள். இதோ பாருங்கள் கடிதத்தை. இது உங்கள் எழுத்துத்தானே? இதோ அடியில் உங் கள் கையெழுத்து, நீங்கள்தானே என்னைக்காலில் மஞ் சள் பட்டையைக் கட்டிக்கொண்டு வரும்படியாகவும், நீங்கள் என்பேரில் காதல் கொண்டிருப்ப தாகவும் எழுதி இருக்கிறீர்கள்? நான் என் காதலை உங்களிடம் வெளியிட்டால் என்னைப் பயித்தியம் என்று சொல்லி, இருட்டறையில் மூடிவைத்து ஒருதடி வைத்தியனை

யும் என்னிடம் அனுப்பி விடலாமா? ஏன் இப் படிச் செய்தீர்கள்?

சந். (கடிதத்தைப் பார்த்து) ஓகோ! சரிதான், மகிபாலா! இது என் எழுத்தல்ல. நீலலோசனி என்னைப்போல் எழுதி இருக்கிறாள். அவள் செய்த காரியந்தானிது. அவள் தான் எனக்கு முதலில் வந்து உனக்குப் பயித் தியம்பிடித்திருக்கிறதென்று என்னிடம் சொல்லியது. உன்னை எவ்வளவு தந்திரமாக பயித்தியமாக்கி விட் டாள் பார்த்தாயா? என்ன சொல்வது. நடந்தது நடந்துபோய் விட்டது. கோபித்துக் கொள்ளாதே.

பாபு. அம்மா! என் வார்த்தையைச் சற்றுக் கேட்க வேண் டும். நானும் சோமநாதனும் தான் இத்தந்திரத்தை முதலில் உண்டாக்கியது. இவன் பேரில் எங்களுக் கிருந்த கோபத்தினல் தான் இப்படிச் செய்தோம். நீலலோசனிதான் கடிதம் எழுதினாள். அவள் சாதுரி யத்தைப் பார்த்துச் சோமநாதன் அவளைக் கல்லி யாணம்செய்து கொண்டு விட்டான். எனக்குத்தான் ஒருவரும் அகப்பட வில்லை.

சாபு. நான் சொல்வதையும் கொஞ்சம் கேட்க வேண்டும். இவன் என்னைத்தடியன்த் தடியன் என்று சொன்னன் அல்லவா? அதுதான் அவனுக்கு இப்படி நேரிட்டது. மகிபாலா! எங்கே இன்னம் ஒருதரம் சொல் 'சிலர் கனவான்களாகவே பிறக்கிறார்கள். சிலர் கண்ணியத் தைச் சம்பாதித்துக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் கனவான்களாக ஆக்கப்படுகிறார்கள். நீ இப்போது கனவான் ஆய்விட்டாய் அல்லவா? நான்தான் வைத்தி யன் வேஷம் போட்டுக் கொண்டு உன்னிடம் வந்தது.

மகி. கடிப்பசகளா! நான் இங்கு இருப்பதே இல்லை. நான் போய் விடுகிறேன். (போகிறான்)

சந். ஐயோபாவம்! நன்றாய் அகப்பட்டுக் கொண்டு விழித்தான்.

ஜய. அவனைப் போய் சாந்தப் படுத்துங்கள்—சந்திரவதனி! நாம் போவோமா? (மிருகதிருஷ்ணிகையைப் பார்த்து) என்கண்மணி! நான் இனிமேல் உன்னைச் சாரசன் என்றுதான் கூப்பிடுவேன். இன்றுமுதல் நீதான் இந்நாட்டுக்கு இராணி; நீயேதான் என் ஆசைக் காதலி. (போகிறார்கள்)

முற்றிற்று.

PRINTED BY P. R. RAMA [illegible] MADRAS.